விலை: 60.00
பக்கங்கள் : 24

website : www.valampurij.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே


# வலம்புரி

## சங்குநாதம்


சங்கு 23
ஒலி 175 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினாலேயே

## மக்களின் மனங்களை வென்று ரணிலால் பணியாற்ற முடியும்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரைக்கும் நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதுவுமே செய்ய முடியாது.

எனவே, கோட்டாபயவை உடன் வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ரணில் முதலில் இறங்க வேண்டும்."

23

## சீனிக்கும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படும்

### நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

சீனிக்கும் கட்டுப்பாட்டு விலையை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையின் விலைகளுடன் ஒப்பிடுகையில், ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் உள்ளூர் சந்தையில் சீனியின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 4 வகையான அரிசிக்கு அதிகபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டு வர்த்த

23

தெற்கு அரசியலில் பரபரப்பு

## டலஸ் தலைமையில் புதிய கூட்டணி



(கொழும்பு)

இலங்கையில் அரசியல் நெருக்கடி சூடுபிடித்துள்ள இந்தத் தருணத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணி அமைக்

23

# 11 அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்க ஆராய்வு

## அதிகரித்த வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்த அரசு கவனம்

*(கொழும்பு)*

*11 அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.*

*குறித்த 11 உணவுப் பொருட்களில் சீனி, பருப்பு, மா, வெங்காயம், உருளைக்கிழங்கு, பதிவு செய்யப்பட்ட மீன், பால்மா, உலர்ந்த நெத்தலி, காய்ந்த மிளகாய் மற்றும் கடலை ஆகியவை அடங்கும்.*

*(23ஆம் பக்கம் பார்க்க)*

பலாலி - மயிலிட்டிப் பகுதிகளில்

## இராணுவ முகாம்கள் நகர்த்தப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

பலாலி மற்றும் மயிலிட்டிப் பகுதிகளில் அமைந்திருந்த சிறிய இராணுவ முகாம்கள் அனைத்தும் நகர்த்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள், மின்சாரம், போக்குவரத்து போன்ற செலவுகளை கட்டுப்படுத்தவே மேற்படி தீர்மானத்தை இராணுவம் மேற்கொண்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இராணுவம் குறித்த பகுதியிலிருந்து நகரும்போதும்

23

## அரிசி ரூ.210



வர்த்தமானி வெளியீடு

03 ஆம் பக்கம் பார்க்க

டீசலுக்கு தட்டுப்பாடு

## தனியார் பேருந்து முழுமையாக முடக்கம்

05 ஆம் பக்கம் பார்க்க


ராஜ் ஜுவல்லர்ஸ்
அடகு பிடிப்பவர்கள்
Best Choice
1 பவுண் 22 கரட்டிற்கு
140,000/=
1 வருட கால அவகாசம் உங்களுக்கு நாங்கள் தருகின்றோம்.
(11747)
இல. 31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (சந்தைக்கு அருகில்)
Tel : 021 221 7287 / 076 6[illegible]




## விலை அதிகரிப்புக்கு எதிராக யாழில் விசேட சுற்றிவளைப்பு

### 7 விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் நேற்று யாழ்ப்

23

மின்சார சபைத் தலைவரின்

## கருத்தை நிராகரித்த ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

இந்தியாவின் அழுத்தம் மற்றும் அதானி நிறுவனம்தொடர்பில் இலங்கை மின்சார சபையின் தலைவர் [illegible] முன்னிலையில்

23

## அரிசியை வாங்கி குவிக்க வேண்டாம்

### அமைச்சர் நளின்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையின் காரணமாக பொதுமக்கள் அதிகளவு அரிசியை வாங்கி குவிக்க

23


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மங்கல
# மணிவிழா வாழ்த்துக்கள்

இன்று மணிவிழாக் காணும்
அல்வாய் நண்பர்கள்
விளையாட்டுக் கழகத்தின்
ஸ்தாபகச் செயலாளர்

உயர்திரு.
## மாரிமுத்து நவநீதமணி



அவர்களை மனதார பாராட்டுவதில்
மகிழ்வடைகின்றோம்.

இன் முகமாய் கல்விதனை இடரறிந்து கற்பித்து
பின் கள வீரனாக பிறர் போற்ற ஆடி நின்று
ஐக்கியத்தின் வழி நின்று ஆக்கிய செயல்களினால்
செப்பனிட்ட எங்கள் பாதை சேமமுற வளர்கின்றதே.

( வாழ்க என்றும் வளர்க )

வாழ்த்துவோர் :-
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்
அல்வாய் கலை இலக்கிய நண்பர்கள்
(11811)


# இலங்கையில் 10 இலட்சம் மாணவர்கள் உணவின்மையை எதிர்நோக்க நேரிடும்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 10 இலட்சம் பாடசாலை மாணவர்கள் உணவின்மையை எதிர்நோக்க நேரிடும் என சேவ் த சில்ரன் அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கும் வேலைத்திட்டம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக இலங்கையிலுள்ள பல பாடசாலைகளில் உணவு வழங்கும் வேலைத்திட்டம் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் அரசுடன் இணைந்து சேவ் த சில்ரன் அமைப்பு நாடுமுழுவதும் உள்ள 850 பாடசாலைகளில் மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. (ம)


## வேலையாட்கள் தேவை

தச்சு வேலையாட்கள், கூலி வேலையாட்கள், பெயின்ரர் (தளபாடம்) தேவை. (தங்குமிட வசதி உண்டு)

தொடர்புகளுக்கு : ஆர்க் தளபாட நிலையம்
இல.35, கொட்டைக்காடு லேன்,
கோண்டாவில் கிழக்கு.
(பஸ் டிப்போவிற்கு அருகாமை)

(11849)

077 300 1763
021 221 9909



## துயர் பகிர்கின்றோம்

எமது ஆலயத்தின் கொடியேற்றத்
திருவிழா, இராஜ கோபுர திருப்பணி
உபயகாரர் மற்றும் முகாமைத்துவ சபை
உறுப்பினருமாகிய

## தர்மலிங்கம் யோகேஸ்வரன்



அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல காட்டுத்தறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
விக்கினேஸ்வரப் பிள்ளையாரினதும்
பகவதி மாரி அம்மனினதும் மற்றும்
கருணாகர வைரவ சுவாமியினதும்
பாதக் கமலங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

காட்டுத்தறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோவில்
இல. 07, ஓடை ஒழுங்கை, ஓட்டுமடம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (11846)

அறங்காவலர்கள் / தர்மகர்த்தாக்கள்,
முகாமைத்துவ சபையினர்.



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் சைவ உணவகத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. மூன்று நேர உணவு தங்குமிட வசதியுடன்.

- உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
- காசாளர்
- பிரதான சமையலாளர், உதவியாளர்கள்
- சுத்திகரிப்பாளர்கள்
- றொட்டி வேலையாட்கள்
- இடியப்பம், பிட்டு, ஏனைய பலகாரம் செய்பவர்கள் (இருபாலாரும்)
- அலுவலக உதவியாளர் (இருபாலாரும்)
- ரீமேக்கர்
- பண்ணை வளர்ப்பு தெரிந்தோர் (வன்னி பெரு நிலப் பகுதியர் விரும்பத்தக்கது)
- யூஸ் தயாரிப்பாளர்

(11847)

☎ - 077 191 5368



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



31ஆம் நாள்
## நினைவலைகள்




அமரர்
## செந்தில்வேல் சர்மி

மலர்வு 08 . 03 . 1985
உதிர்வு 13 . 05 . 2022

அன்பு மொழி பேசி
அகத்தினிலே இடம்பிடித்து
பண்பெனும் தேரினிலே
பவனி வந்த பாச நிலவே
சோகத்தில் மூழ்கியிங்கு
சொந்தங்கள் துடிதுடிக்க
வானத்திற் கொளிதரவோ!
இவ்வையகத்தை விட்டகன்றாய்
கனவுகள் கூட கலைந்திடும்
தினம் தினம்
நினைவுகள் என்றும் நீங்காது
நிலைத்து நிற்கும்
மனதினை உனது பிரிவுத்துயர்
தினம் வாட்ட
மன்றாடுகின்றோம் ஈசன் மலர்
பாதம் சேர...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-4484)

கொக்குவில் உன் நினைவலைகளுடன்: உறவுகள்



## மரண அறிவித்தல்

### சதீஸ்வரன் கலைச்செல்வி (துர்க்கா)



கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகவும் மணற்தரை வீதி, அரசடி நல்லூர் மற்றும் செட்டியார்மடம், அராலி வடக்கு எனும் முகவரிகளில் தற்காலிகமாக வசித்தவருமான சதீஸ்வரன் கலைச்செல்வி நேற்று (11.06.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் பூமலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் சதீஸ்வரனின் ( இராணுவ விவசாயப் பண்ணை- பலாலி) பாசமிகு மனைவியும் தேனுஜாவின் (தரம் 03 மாணவி- கட்டுவன்புலம் பாடசாலை) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தெல்லிப்பழை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை. (11851) 077 606 2944 077 795 6037 தகவல் :- குடும்பத்தினர்


## தீக்கிரையாக்கப்பட்ட தனது வீட்டை பார்வையிட்ட எம்.பி

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தீயினால் நாசமான அவரது வீட்டை நேற்று முன்தினம் காலை பார்வையிட்டார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் என பலரது வீடுகளும், உள்ளூர் அரசியல்வாதிகளின் வீடுகளும் தீயிட்டு சேதப்படுத்தப்பட்டன.

அநுராதபுரம் விமான நிலைய வீதியிலுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் வீடும் தீயிட்டு சேதப்படுத்தப்பட்டது.

சம்பவம் இடம்பெற்று ஒரு மாதத்தின் பின்னர் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மற்றும் அவரது குடும்பத்தினர் தீயினால் சேதமடைந்த வீட்டை பார்வையிட்டனர். (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (11827)
077 185 5268


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை நடத்தினால் மட்டுமே வெளிநாடுகளின் ஆதரவு கிடைக்கும்

## சீனத்தூதுவரை சந்தித்த பின் மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**தற்போதைய அரசாங்கம் மாறினால் மாத்திரமே, இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென்ஹாங் உடனான சந்திப்பின் பின்னர் பொலன்னறுவையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் இடைக்கால அரசாங்கம் அமைத்து பொதுத் தேர்தலை நடத்தினால் மாத்திரமே இலங்கைக்கு வெளிநாடுகள் மற்றும் அமைப்புகளின் ஆதரவைப் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டு தற்போதைய அரசாங்கம் கொண்டு வரும் அனைத்து நன்மை பயக்கும் சீர்திருத்தங்களுக்கும் தமது கட்சி ஆதரவளிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# பச்சை அரிசி 210 ரூபாய்

## நுகர்வோர் அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

வெள்ளை மற்றும் சிவப்பு பச்சையரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானியை நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை, சிவப்பு பச்சை அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாவாகும்.

அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் அரிசியை விற்கவோ, வழங்கவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-6)

# ஜனாதிபதியின் கூட்டத்தை புறக்கணித்த ஹரின்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் சுற்றுலாத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஹரின் பெர்னாண்டோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சுற்றுலாத்துறை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் பொருளாதாரத்தை காப்பாற்றுவதற்காக. அரசாங்கத்தில் இணைந்து கொண்ட போதிலும் அரசாங்கத்திற்கு எதிரான 'கோட்டா கோ கமா' போராட்டத்திற்கு தான் ஆதரவளிப்பதாக ஹரின் பெர்னாண்டோ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# யூரியா உரக்கொள்வனவு கடன்வரி ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கான டொலர் கடன் வரியை பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை நேற்று இந்தியாவுடன் கைச்சாத்திட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் நிதியமைச்சின் செயலாளர் எம். சிறிவர்தன EXIM Bank of India உடன் கைச்சாத்திட்டார்.

யாலா சாகுபடிப் பருவத்தில் யூரியா உரத் தேவையின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 65,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்கு இந்திய அரசிடம் கடன் வசதி கோரப்பட்டது.

கோரிக்கையை ஏற்று, இந்தியாவில் இருந்து யூரியா உரம் கொள்முதல் செய்வதற்கு 55 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வரியை வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டது.

உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விவசாய அமைச்சர் மஹிந்த அமர வீர மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் மேற்பார்வையிட்டனர்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பற்றாக்குறையை நாடு எதிர் கொண்டுள்ள நிலையில், மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதே தனது முன்னுரிமை என்று பிரதமர் முன்னர் குறிப்பிட்டிருந்தார். இந்த கடன் வசதி எதிர்வரும் யாலா பருவத்தில் யூரியா கிடைப்பதை உறுதி செய்ய உதவும் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)

# உலக உணவு திட்டப் பணிப்பாளர் இலங்கை விஜயம்




(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் பீஸ்லி விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் தலைவரை நாட்டிற்கு விஜயம் செய்யுமாறு தான் அழைப்பு விடுத்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள பிரதமர், உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அனைத்து ஆதரவையும் பாராட்டுவதாகவும் தெரிவித்தார். (நி-6)

# முட்டையின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில மாதங்களாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில்,

தற்போது கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை மக்காச்சோள தட்டுப்பாடு மற்றும் மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமமே குறித்த விலை அதிகரிப்புக்குக் காரணம் எனவும் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது முட்டை ஒன்றின் விற்பனை விலை 50 ரூபாவை எட்டியுள்ள அதே நேரம் கோழி இறைச்சி 1,200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பொது இடங்களில் முகக்கவசம் அணியுங்கள்

## ராஜித கோரிக்கை

(கொழும்பு)

பொது இடங்களில் முகக்கவசம் அணியுமாறு முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்று காரணமாக முக்கவசம் அணிவதற்கான கட்டாயத் தேவையை நீக்குவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தீர்மானித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த தீர்மானம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் நாட்டில் தற்போது மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கொரோனா தொற்று உறுதியான நோயாளி மேலும் சிரமத்தை எதிர்கொள்ளலாம் என அவர் குறிப்பிட்டார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாவே அணிக்கெதிரான தொடரை வென்றது ஆப்கானிஸ்தான்

சிம்பாவே அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், ஆப்கானிஸ்தான் அணி, 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.




இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை ஆப்கானிஸ்தான் அணி 3-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியுள்ளது.

ஹராரே மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய சிம்பாவே அணி, 44.5 ஓவர்கள் நிறைவில் 135 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ராஸா 38 ஓட்டங்களையும் ரியான் பர்ல் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ரஷித் கான் 3 விக்கெட்டுகளையும் நபி மற்றும் பரூக்கி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் பரீட் அஹமட், முஜிப் உர் ரஹ்மான் மற்றும் அஸ்மதுல்லா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 136 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, 37.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், ஆப்கானிஸ்தான் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஹஸ்மதுல்ல ஷயீடி 38 ஓட்டங்களையும் மொஹமட் நபி ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிம்பாவே அணியின் பந்துவீச்சில், பிளெஸிங் முஸரபானி மற்றும் டென்டாய் சடாரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்ளையும் டியோன் மேயர்ஸ் மற்றும் ரியான்பர்ல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ரஷித்கான் தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் நாயகனாக ரஹ்மத்ஷா தெரிவு செய்யப்பட்டார். (4)




கருகம்பனை கவுணாவத்தை
நரசிங்க வைரவர் ஆலய
மரபுவழி வேள்வி பொங்கல்
(2022)


அறிவித்தல்..!!

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த மரபுவழி வேள்வி பொங்கல் விழாவுக்கான விளக்கு வைத்தல் நிகழ்வானது கடந்த 10.06.2022 அன்று சிறப்பாக இடம்பெற்றதுடன், வருடாந்த மரபுவழி வேள்வி பொங்கல் உற்சவமானது எதிர்வரும் 18.06.2022 சனிக்கிழமை பல வருடங்களுக்குப் பின்னர் ஆலயத்தில் சிறப்பாக இடம்பெறவுள்ளதுடன், எதிர்வரும் 24.06.2022 வெள்ளிக்கிழமை எட்டாம் மடை உற்சவம் இடம்பெறவுள்ளது.

– ஆலய தர்மகர்த்தா–
077 360 5009

(11852)


# ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஹெற்றிக் தங்கப் பதக்கம்



கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் ஹெற்றிக் தங்கப் பதக்கங்களை சுவீகரித்து சாதனை படைத்துள்ளார்.

கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் தட்டெறிதல், குண்டு போடுதல், சம்மட்டி எறிதல் போன்ற போட்டிகளிலேயே தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்துள்ளார். 20 வயதுப் பிரிவினருக்கான குண்டு போடுதலில் 15.13 மீற்றர் தூரம் எறிந்தும், தட்டெறிதலில் 45.30 மீற்றர் தூரம் எறிந்தும், சம்மட்டி எறிதலில் 40.45 மீற்றர் தூரம் எறிந்தும் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்துள்ளார். (4-90)

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு அவர்கள் நேற்று (11.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிதம்பருத்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் JP - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகநாயகியின் அன்புக் கணவரும் குமாரணி, ஜெகநந்தினி (ஆசிரிய ஆலோசகர் - வவுனியா தெற்கு கல்வி வலயம்), நிமலக்குமார் (சுவிஸ்), ஜெகதாரணி (ஆசிரியை- வவுனியா ரம்பைக்குளம் மகளிர் கல்லூரி), ஜனார்த்தனி (இத்தாலி), ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான குணசிங்கம், பாலசிங்கம், செல்வராணி மற்றும் இரத்தினசிங்கம், வீரசிங்கம், செல்வரத்தினம், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மநாதன், யோகநாதன், இந்திரநாதன், தவநாதன், குணநாயகி, தனநாயகி, கமலநாயகி, சிவநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திலீபராஜனின் (இத்தாலி) அன்பு மாமனாரும் தியாஸின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

077 432 2736

தகவல்:
குடும்பத்தினர்
(C-4489)

# இந்தியாவிற்கு எதிரான இருபது - 20 தொடர்

## தென்னாபிரிக்கா வெற்றி

இந்திய அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலை பெற்றுள்ளது.

டில்லியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 212 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 31 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட டேவிட் மில்லர் தெரிவு செய்யப்பட்டார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வான் மீது போர் தொடுக்கப்படும்

## சீனா பகிரங்க எச்சரிக்கை

(பீஜிங்)

**சீனாவின் ஒரு பகுதி தாய்வான், சீனாவில் இருந்து தாய்வானை பிரிக்க முற்பட்டால் அதன் மீது போர் தொடுக்க சீன தயங்காது என சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.**



சீனாவின் எல்லையில் அமைந்துள்ள தாய்வான் மீது சீனா படையெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

இந்நிலையில் சிங்கப்பூரில் நடைபெற்ற ஷங்ரி-லா பாதுகாப்பு உச்சிமாநாட்டில் அமெரிக்கப் பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின், சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் வெய் ஃபெங்கை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பில் தாய்வான் பிரச்சினையை பற்றி இருவரும் விவாதித்தனர்.

அப்போது அமெரிக்க பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின், தாய்வான் நாட்டை சீர்குலைக்கும் நடவடிக்கையை சீனா தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்கு பதிலளித்த வெய் ஃபெங், தாய்வானை சீனா நாட்டின் ஒரு பகுதியாக கருதுகிறது.

தாய்வானை சீனாவில் இருந்து பிரிக்க துணிந்தால் அதன் மீது போர் தொடுக்கவும் சீனா தயங்காது. மேலும் சில நாடுகள் சீனாவைக் கட்டுப்படுத்த தாய்வானை பயன்படுத்துவது ஒருபோதும் வெற்றி பெறாது.

தாய்வானின் சுதந்திரம் என்னும் சதியை முறியடித்து நாட்டின் ஒருங்கிணைப்பை சீனா உறுதி செய்யும்.

இவ்வாறு சீன அமைச்சர் தெரிவித்தார். (4-6)

# மீண்டும் திரிபோஷா

(கொழும்பு)

நாட்டில் திரிபோஷா உற்பத்தியை மீள ஆரம்பிப்பதற்கான உதவிகளை வழங்க உலக உணவுத் திட்டம் (WFP) இணங்கியுள்ளது.

இது தொடர்பில் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் வெற்றியடைந்ததாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக முன்னர் நிறுத்தப்பட்ட திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான சோளம் உள்ளிட்ட மூலப்பொருட்களை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (4-6)

# தனியார் பேருந்து சேவைகள் முழுமையாக முடங்கும் அபாயம்

(கொழும்பு)

டீசல் தட்டுப்பாடு காரணமாக, அடுத்த வாரத்தில் தனியார் பேருந்து சேவை முழுமையாக முடங்கக்கூடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையினால் வழங்கப்படும் டீசல் தற்போது பற்றாக்குறையாக உள்ளதோடு டீசல் இன்மையால் நேற்று பெருமளவான பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது .

மேலும் அடுத்த வாரம் தனியார் பேருந்து சேவை முழுமையாக முடங்கக்கூடும் எனவும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார். (4-6)

# 50 நாட்களை பூர்த்தி செய்த புத்தளம் கோட்டா கோ கம



(புத்தளம்)

கொழும்பிலுள்ள கோட்டா கோ கமவிற்கு ஆதரவு தெரிவித்து புத்தளத்திலும் கோட்டா கோ கம கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிலையில் கோட்டா கோ கம ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 50 ஆவது தினத்தை பூர்த்தி செய்தது.

ஜனாதிபதி கோட்டாவிற்கு எதிராக கோட்டா கோ ஹோம் என கோஷங்கள் எழுப்பபட்டு மக்கள் எதிர்பில் ஈடுபட்டனர். (நி-6)

# குடிவரவு குடியகல்வு திணைக்கள சேவைகள் நாளை நடைபெறும்

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் தலைமைக்காரியாலயம் உள்ளிட்ட அனைத்து பிராந்திய காரியாலயங்களும் நாளை திங்கட்கிழமை திறந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு நாளை திங்கட்கிழமை அரச பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்து.

எனினும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் தலைமைக்காரியாலயங்களும் பிராந்திய காரியாலயங்களும் திறக்கப்பட்டிருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6)

# இராசிபலன்

12.06.2022
வைகாசி 29, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி முன்னிரவு 10.22 மணிவரை
விசாகம் முன்னிரவு 10.18 மணிவரை

சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம் - ரேவதி, அச்சுவினி

வளவன்




மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கௌரவக் குறைவான நாள்.




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




எடுத்த காரியங்களில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் சந்திப்புண்டு.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.




கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.




கற்பனை மிகுதியான நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, காரியங்களில் வெற்றி பெற கடவுளை வழிபட வேண்டிய நாள்.




செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்து உபசாரங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் உங்களுக்கு உதவ முன்வரலாம், வருமானம் திருப்தி தரும்.




பொழுதுபோக்கு விடங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**வெளிப்படையாக இருந்து விடாதே பலர் உன்னை வெறுக்க நேரிடும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை, கால் கட்டப்பட்ட நிலையில் ஒருவர் உயிருடன் மீட்பு

## மட்டுவிலில் சம்பவம்

(சாவகச்சேரி )

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் உள்ள வயல் வெளி ஒன்றில் நேற்று சனிக் கிழமை மதியம் கை, கால் மற்றும் வாய் ஆகியன கட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவர் காணப்பட்ட நிலை யில் விவசாயி ஒருவர் அவரை மீட்டு மருத்துவ மனையில் அனுமதித்து ள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கருவாடு விற்பனை செய்ய வவுனியாவில் இரு ந்து முச்சக்கரவண்டியில் தென்மராட்சி வந்த நபரை நேற்று முன்தினம் வெள்ளி க்கிழமை இரவு கும்பல் ஒன்று தாக்கி கை, கால், வாய் ஆகியவற்றை கட்டி ஆள் நடமாட்டமற்ற வயல் பகுதியில் தூக்கி வீசியுள் ளனர்.

அதன் பின்னர் குறித்த கும்பல் வியாபாரியின் முச்ச க்கரவண்டியில் சென்று நுணாவில் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து திருட்டு முயற்சியில் ஈடுபட்ட சமயம் தகவலறிந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்ற நிலையில் முச்சக்கர வண்டியை கைவிட்டு குறித்த கும்பல் தப்பித்துச் சென்றுள்ளது.

இந்நிலையில் நேற்று சனிக்கிழமை மதியம் குறித்த நபரின் முனகல் சத்தம் கேட்டு அவ்வழியே சென்ற விவசாயி ஒருவர் அவரை மீட்டு நோயாளர் காவு வண்டி மூலம் மருத்து வமனையில் சேர்ப்பித்து ள்ளார்.

இதில் பண்டாரிக்குளம் வவுனியா பகுதியைச் சேர் ந்த 45 வயதான வியாபாரி ஒருவரே தாக்குதலுக்கு இல க்கான நிலையில் சாவ கச்சேரி ஆதார மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த சம்பவம் தொட ர்பில் சாவகச்சேரிப் பொலி ஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வரு கின்றனர். (4-6-30)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலை க்கழகத்தினால் நடத்தப்படும் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண் ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இரு ப்பதுடன் க.பொ.த (சா/த) பரீ ட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித் தியடைந்திருத்தல் வேண் டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 08.07.2022 வரை விண்ணப்பிக்க முடியும் மேலதிக விபரங்களுக்கு உத விப்பணிப்பாளர் இலங்கை திற ந்த பல்கலைக்கழகம், யாழ் ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவோ அல் லது உதவிப்பணிப்பாளர் இல ங்கை திறந்த பல்கலைக்கழ கம், மன்னார் கற்கை நிலை யம், RDS கட்டடம், சிறிய குருமட வீதி, சாவற்கட்டு எனும் முகவரியூடாகவோ தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடி யும் என இலங்கை திறந்த பல்கலைக்கழக உதவிப்பணி ப்பாளர் கே.கந்தவேல் அறி வித்துள்ளார். (4-6)

# 'ஞானத்தேர்' சிறப்பு மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நூறாண்டுகள் கடந்து சைவநற்பணி ஆற்றிவரும் அளவெட்டி சைவ வாலிப சங்க த்தின் "ஞானத்தேர்" என்ற ஆவணத் தொகுப்பு நூல் (சிற ப்பு மலர்) வெளியீடு இன்று பிற்பகல் 2.30 மணியளவில் அளவெட்டி கும்பிழாவளை பிள் ளையார் கோயில் திருமண மண்டப வளாகத்தில் இடம்பெற வுள்ளது என சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (4)



பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான உதவிப்பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. குறிப்பாக விவசாய உபகரணங்கள், மீன்பிடிவலைகள், மற்றும் துவிச்ச க்கரவண்டிகள் உட்பட 6 மில்லியன் பெறுமதியான உதவித் திட்டங்கள் 173 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது. (படம் : சதீஸ்)

# யாழில் அரசாங்கத்திற்கு எதிராகச் சுவரொட்டிகள்

(குப்பிழான்)

யாழ்.நகரம் மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் தற் போதைய அரசாங்கத்திற்கு எதிராகச் சுவரொட்டிகள் ஒட்ட ப்பட்டுள்ளன.

"கோட்டா- ரணில் அசுத்தக் கூட்டணியை விரட்டியடிப் போம்!", "# Go Home Gota" எனக் குறித்த சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள மொழிகளில் எழுதப்பட்டுள்ள குறித்த சுவ ரொட்டிகளின் கீழ் மக்கள் போராட்ட இயக்கம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-18)

# பாஷையூர் அந்தோனியார் ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந் தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை 13 ஆம் திகதி காலை 5.15 மணி முதல் திருப்பலியுடனும் 6.30 மணி க்கு திருவிழாத் திருப்பலியு டனும் இடம்பெறும்.

அத்துடன் மாலை 4.30 மணிக்கு புனிதரின் தேர்ப்ப வனியும் இடம்பெறும் என ஆலய பங்குத்தந்தை அறி வித்துள்ளார். (4-6)

# நீராவியடி வீரகத்தி விநாயகருக்கு நாளை தேர்த்திருவிழா

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநா யகர் ஆலய சுபகிருது வருட மஹோற்சவத்தின் தேர்த் திரு விழா நாளை திங்கட்கிழமை காலை 7.15 மணிக்கு இடம் பெறும். இவ்வாலய மஹோற்ச வத்தின் சப்பரத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம் பெற வுள்ளதுடன் எதிர்வரும் செவ் வாய்க்கிழமை காலை 9 மணி க்குத் தீர்த்தத் திருவிழாவும், மாலை கொடியிறக்க உற்சவ மும் நடைபெறும். (4-6-18)

# திருவள்ளுவர் தினப் பரிசளிப்பும் ஆண்டு நிறைவு விழாவும்

(யாழ்ப்பாணம்)

உலக இளையோர் திரு க்குறள் மன்றத்தின் திருவள் ளுவர் தின பரிசளிப்பும் ஆண்டு நிறைவு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 6 மணி வரை கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண் டபத்தில் மன்ற இயக்குநர் வ.இளஞ்கோவன் தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீசற் குணராஜாவும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவ லிங்கராஜாவும், வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச் சந்திரனும், செஞ்சொற் செல்லர் கலாநிதி ஆறுதிருமுருகன் மற்றும் யா/கொக்குவில் இந்து க்கல்லூரி முன்னாள் அதிபர் பொ.கமலநாதன் ஆகியோர் கல ந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# சுன்னாகம் அந்தோனியார் ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புனித அந்தோ னியார் ஆலயத் திருவிழா நாளை 13 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாள் திரு ப்பலியுடன் ஆரம்பமாகவுள்ளது.

நற்கருணை வழிபாடு இன்று மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமா கும் என ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (4-6)



மாற்றுப்பாலின சமூகத்தினருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை கண்டித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் யாழ்ப்பாணத்தில் நேற்று பேரணியொன்று இடம்பெற்றது. யாழ்.திருநர் வலையமைப்பின் ஏற்பாட்டில் மாற்றுப்பாலின சமூகத்தினரை ஒடுக்குமுறைகளுக்குட்படுத்தாத வாழ்தலை நோக்கி குரல் கொடுப்போம் என்ற நோக்கில் வானவில் நடையயண ஒருங்கிணைவு எனும் தலைப்பில் இந்தப் பேரணி இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன், ரவிசாந்)

# மக்கள் கைகளில் அதிகாரம் இருக்க வேண்டும்

## முன்னிலை சோசலிச கட்சி

(யாழ்ப்பாணம்)

மக்களின் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வெளி யில் உருவாக்குவது தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித் தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந் திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே குமார் குணரட்னம் இதனை தெரிவி த்தார்

மேலும் தெரிவிக்கையில், மக்கள் அதிகாரத்தை அரசா ங்கத்திற்கு வழங்கிவிட்டு இரு ப்பதனாலேயே பல்வேறு பிரச் சனைகளுக்கும் முகம் கொடு க்கின்றனர். கடந்த 74 வருட ங்களாக இதே நிலைமையே காணப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவோ ஐக்கிய தேசிய கட்சியோ ஐக்கிய மக்கள் சக்தியோ ஒரு ஆட் சியை உருவாக்குவதற்கு பதி லாக மக்கள் தமது அதிகார த்தை உருவாக்குவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். மக்கள் வாக்களித்து விட்ட வுடன் கடமை முடிந்துவிட்டதாக தற்போது நிலைமை காண ப்படுகின்றது.

கிராம மட்டத்தில் இருந்து மாவட்டம் என தேசிய ரீதியில் ஜனநாயக அடிப்படையில் தேசியப் பேரவை உருவாக்க வேண்டும்.

நிறைவேற்றதிகார முறை இல்லாமல் செய்யப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பை மக்கள் மத்தியில் நடத்தி புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். அது வெளியில் இருந்து பெறப்பட வேண்டும் என தெரிவித்தார். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சுயலாபங்கள் நாட்டை சீரழித்துவிட்டன

"ரோம் மாநகரம் பற்றி எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையாய் ஆட்சியாளர்கள் செயற்படுவது நாட்டை கட்டி எழுப்பாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்."

**- அபிமன்யு**

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்திற்குப் பொறுப்புக்கூற ஆட்சியாளர்கள் எவரும் தயாராக இல்லை.

மாறாக அவர்கள் பந்தை அடிப்பது போல இதற்கும் எமக்கும் தொடர்பேதும் இல்லை. இவை எமக்கு முதல் இருந்த ஆட்சியாளர்களால் ஏற்பட்டது என ஆள் மாறி குற்றம் சாட்டி வருகின்றனர்.

இது நேசறிப் பிள்ளைகளின் கிள்ளல், நுள்ளல் கதையிலும் மிக மோசமானது என்பதை அவர்கள் உணரவே இல்லை.

இலங்கை வரலாற்றில் என்றும் இல்லாத ஒரு உணவுப் பஞ்சத்தை நாடு எதிர் நோக்கியுள்ளது என பலதரப்பட்டவர்களும் எச்சரிக்கை விடுத்தும் அதை மீட்க எவரும் தயாராக இல்லை என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

மாறாக தமது அரசியல் இலாபங்களுக்காக குறுகிய மனப்பான்மையுடன் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் யுத்தம் செய்த காலத்தில் கூட இவ்வாறான பொருளாதாரச் சிக்கலையோ பொருட்களுக்கான விலையேற்றத்தையோ நாடு கண்டிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒரு தேன் குப்பி அளவு பெற்றோல் ஐந்நூறு ரூபாய் விற்கப்பட்டது. இது ஆட்சியாளர்களின் குறுகிய சிந்தனையின் வெளிப்பாடே.

இப்போதைய பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாட்டை மீட்டெடுக்க பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்பு அவசியம் என்பது மறுக்க முடியாது. ஆனாலும் அதற்கான நேரம் இதுவல்ல என்பதே இங்கு சுட்டிக் காட்ட க்கூடிய விடயம்.

பாரிய உணவுப் பஞ்சம் வரப் போகிறது வீட்டுத் தோட்டத்தைச் செய்யுங்கள் என அரசாங்கம் எச்சரித்தால் பொது மக்களால் எதைச் செய்துவிட முடியும். சாதாரணமாக மரவள்ளிக்கன்று வளர்ந்து பயன்தர நான்கு ஐந்து மாதங்களேனும் எடுத்துக் கொள்ளும்.

அவ்வாறு மரவள்ளியையோ வேறு இதர பயிர்களையோ வீட்டுத் தோட்டத்தில் மேற்கொண்டால் ஒரு குடும்பத்திற்கு அது எத்தனை நாட்களுக்குத் தாக்குப் பிடிக்கும் என்ற விடயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும்.

இந்த அசாதாரண சூழ்நிலையில் பாமர மக்களின் நிலை மிக மோசமாக உள்ளதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆம், அத்தியாவசியப் பொருட்களின் விலை நூறு மடங்கு உயரந்துள்ள நிலையில் பணம் படைத்தவர்கள் பொருட்களை விலை கொடுத்து வாங்கி தமது தேவைக்காக வீட்டில் பதுக்குகின்ற செயற்பாடானது பொருட்தட்டுப்பாட்டிற்கு மூல காரணமாக அமைவதுடன் வர்த்தகர்களும் பொருட்களின் விலையை ஏற்றுவதற்காக செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றனர் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

நிலை இவ்வாறிருக்கையில் அன்றாடம் கூலி வேலை செய்யும் சாதாரண பாமரர்களால் எவ்வாறு வாழ்க்கையை கொண்டு செல்ல முடியும். அன்றைய நாளிற்கே வீட்டில் கஞ்சிக்குக் கூட வழியில்லாத நிலையில் அவர்களால் எவ்வாறு பொருட்களை சேமித்து வைக்க முடியும்.

இங்கு நாம் மனசாட்சியுடன் நடந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. இதைச் சொல்லும் போது பலருக்குக் கோபம் பீறிட்டு எழும். ஆனால் அதற்கு ஏதும் செய்துவிட முடியாது.

ஊரே பட்டினியால் சாகும் பொழுது குறிப்பிட்ட சிலர் மட்டும் சேமித்த உணவை வைத்து உண்டு உயிர் வாழ்ந்து பயனேது?

நாட்டின் முதுகெலும்பு விவசாயம். அந்த விவசாயத்திற்குத் தேவையான இரசாயன உரத்திற்கு தடை விதித்ததாலேயே இன்று இந்த நிலை என்று சொன்னால் அதை எவராலும் மறுத்துவிட முடியாது.


கண்கெட்ட பின்னால் சூரிய நமஸ்காரம் செய்தது போல அனைத்தும் அழிந்து கந்தறுந்த பின்னர் உரத்திற்கான தடையை அரசு நீக்கியதால் பயனேதும் நடந்து விடாது.

அத்துடன் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சிப் போர் உச்சம் பெற்ற போது, இதோ நான் இலங்கையை மீட்கிறேன் என பிரதமர் பதவியை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் எதிர்காலத்தில் பசி, பட்டினி ஏற்படும் என எச்சரிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் இது ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் தந்திரோபாயம். தோல்வி கண்ட ஐ.தே.காவை மீண்டும் மீட்டெடுக்க நாட்டை இன்னும் மிக மோசமான நிலைக்கு ரணில் கொண்டு செல்கிறார்.

இனிது காலத்தில் இவை அனைத்தையும் சரிசெய்து விட்டு தன்னால்தான் இலங்கை மீண்டதாக தனக்குத் தானே தலைப்பாகை கட்டுவதற்கு ரணில் முயற்சிக்கின்றார் என ஜே.வி.பி. குற்றம் சாட்டியிருக்கிறது.

ரோம் மாநகரம் பற்றி எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையாய் இலங்கை வாழ் மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்கும் போது அரசியல்வாதிகள் தங்களது சுயநல அரசியலுக்காக செயற்பட்டுக் கொண்டிருப்பதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நிலை இவ்வாறு செல்லுமாக இருந்தால் மக்களின் உணவுக்கான போர் உக்கிரமடையும். அந்த உக்கிரம் சிவனின் சிவ தாண்டவ உக்கிரத்திலும் மிக மோசமானதாக இருக்கும்.

இதில் முப்புறங்களும் எரியும். இந்தத் தீயில் சுய நலத்துக்காக மக்களின் வயிற்றுடன் விளையாடிய அரசியல்வாதிகள், பொருட்களைப் பதுக்கி பல மடங்கு விலை கூட்டி விற்பனை செய்த வர்த்தகர்கள், அடுத்தவர் பட்டினி கிடந்து செத்தால் என்ன, நாம் எமது வீட்டிற்குத் தேவையானதை சேர்த்து வைப்போம் என்ற குறுகிய சிந்தனை கொண்டோர் அனைவரும் எரிந்து சாம்பலாவது சர்வ நிச்சயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் திருமதி.செல்வராணி சகாதேவன் அவர்கள் காலமாகிவிட்டார். ஆளுமை மிக்க அதிபராக இருந்து கல்விப் பணி ஆற்றிய அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** இலங்கையில பஞ்சம் வரப் போகுது எண்டு ஐ.நா. சபை எச்சரிக்கை செய்திருக்குது. பஞ்சம் வந்தால் பட்டினிச் சாவு நிச்சயம் ஏற்படும். இருந்தும் எங்கட தமிழர் தரப்பு பேசாமல் இருக்குது. இதை நினைச்சாத் தான் நெஞ்சு பொறுக்குதில்லை.

**கங்காணி:** எங்கட எம்.பிமார் இது விடயத்தில கவனம் செலுத்தினால் என்ன?

**மூப்பர்:** அவையள் ஒருநாளும் கவனம் செலுத்த மாட்டினம். தேசிய அரசாங்கம் அமையப் போகுது எண்டவுடன் ஏதேனும் பொறுப்பான பதவி எடுக்கலாமோ எண்டு பார்த்தவியள் அதுவும் சரிவரல்ல.

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை எடுத்து சிங்கள மக்களின்ர போராட்டத்தை நீத்துப் போகச் செய்து விட்டார். இனிச் சிங்கள மக்களும் போராட மாட்டினம்.

**சிறாப்பர்:** அப்ப பட்டினியால மக்கள் சாகிற அவலத்தைத் தடுக்க முடியாது எண்டு சொல்லுறியளோ.

**மூப்பர்:** இலங்கையில ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால பட்டினிப் பேரவலம் ஏற்படுமெண்டு ஐ.நா. சபை செய்த எச்சரிக்கையை யாரும் சாதாரணமாக நினைத்து விடக் கூடாது. ஐ.நாவின்ர கணிப்பு ஒருக்காலும் பொய்க்காது.



பட்டினிச்சாவு ஏற்படும் என்ற ஐ.நாவின் எச்சரிக்கை...

**கங்காணி:** அப்ப என்னதான் செய்யிறது.

**விதானையார்:** முதலில வடக்கு-கிழக்குத் தமிழர் தாயகத்தில இருக்கிற நெல்லைப் பாதுகாக்க வேணும். வடக்கு-கிழக்கு மாகாணத்தில இருக்கிற நெல்லை வேறு மாகாணங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாதென்ற சட்டத்தை மாகாண சபை நிர்வாகம் அமுல்படுத்த வேணும்.

**சிறாப்பர்:** மாகாண சபை நிர்வாகம் இல்லாத நேரத்தில எப்படி சட்டம் போடுறது.

**விதானையார்:** மக்களால தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை இல்லையே தவிர, ஆளுநர் இருக்கிறார் தானே. அவர் அந்தச் சட்டத்தை அமுல்படுத்தலாம்.

**வாத்தியார்:** விதானையார் சொல்லுற மாதிரி ஆளுநர்கள் அந்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் நல்லதுதான். ஆனால் அதைச் செய்ய வடக்கு-கிழக்கு ஆளுநர்கள் தயாரோ.

எங்க எங்கட பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற ஏக்கத்தில ஆளுநர்கள் இருக்கினம். இந்த நேரத்தில போய், வடக்கு-கிழக்கு மாகாணங்களில இருக்கிற நெல்லை வெளி மாகாணங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது எண்டு தடை போடுவினம் என்பது சந்தேகம் தான்.

**பண்டிதர்:** இது தொடர்பில எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் இறுக்கமான கோரிக்கையை முன்வைத்தால் ஆளுநர்கள் செய்துதானாக வேணும்.

**வாத்தியார்:** அதுசரி அரிசியின்ர கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகளவு விலைக்கு விற்றால் சட்டம் பாயுமெண்டு எங்கட யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அறிவித்திருக்கிறார். அந்த அறிவிப்போட அரிசியின்ர விலையில் வீழ்ச்சி ஏற்படுமோ.

**விதானையார்:** அதிகூடிய விலையில அரிசி விற்கிறவர்களில சில பேரையாவது கைது செய்து நீதிமன்றில நிறுத்தினால் ஓரளவுக்கு நிலைமை சரிவரும்.

ஆனால் அதைச் செய்யிறதுக்கு இஞ்ச ஆரு இருக்கினம். அரிசியின்ர விலையைக் கூட்டி விற்கிறார் என்றால், அவரிட்ட ஏதேனும் வாங்கலாம் எண்ட நினைப்பில இருக்கிற பொலிஸாரால ஒருபோதும் சட்டத்தை நிலை நிறுத்த முடியாது.

இந்தாப் பாருங்க, எங்க பார்த்தாலும் கொலையும் கொள்ளையும் தாண்டவமாடுது. விபத்து மரணங்கள் தாராளமாக நடக்குது. ஆனால் பொலிஸார் பேசாமல் இருக்கினம்.

**சிறாப்பர்:** இனிக் கொள்ளையடிப்புத்தான் நடக்கப் போகுது. அங்கர் பால்மா இல்லை எண்டு பசுப்பால் வாங்கப் போனால், பாலுக்குள்ள தண்ணியாம். அப்ப என்னெண்டு சீவியம் நடத்துறது.

**வாத்தியார்:** உண்மைதான். நேற்று திருநெல்வேலிச் சந்தைக்குப் போனன். அங்க சந்தை வெறிச்சுப் போய்க் கிடக்குது. ஏகப்பட்ட மரக்கறி வகைகளை விற்பனை செய்கின்ற சந்தை வியாபாரிகள், ஒருசில மரக்கறிகளோட இருக்கிறதைப் பார்த்தபோது கவலையாக இருந்தது. மரக்கறிகளைக் கொண்டு வந்து குவித்து வைத்து வலு சுறுசுறுப்பாக வியாபாரம் செய்த வர்த்தகர்கள் அமைதியாக-சோகத்தோட இருந்தினம்.

இப்படித்தான் எல்லாச் சந்தைகளின்ர நிலைமைகளும் எண்டால் சந்தை வியாபாரிகள் என்ன செய்ய முடியும்.


அதுமட்டுமல்ல திருநெல்வேலிச் சந்தையில ஒரு கிலோ தக்காளிப் பழம் 600 தொடக்கம் 700 ரூபா வரையில போய்ச்சுது.

சின்ன வெங்காயம் 400 ரூபாய். வெண்டிக்காய் ஒரு கிலோ 200 ரூபாய். இந்த நிலையில ஏழை மக்கள் எப்படிச் சீவியம் நடத்துறது.

**பண்டிதர்:** நிலைமை மோசமாகப் போகுது என்பதை மக்கள் உணர வேணும். இல்லை எண்டால் பேரவலத்தினின்றும் மக்கள் மீள முடியாது. ஆகையால வீட்டுத் தோட்டத்தை ஆரம்பியுங்கள். மரவள்ளிச் செய்கையில ஈடுபடுங்கள் என்ற கோரிக்கையை பொதுமக்களிட்ட முன்வைப்பதென்ற தீர்மானத்தையும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில இருக்கிற நெல்லை வெளி மாகாணங்களுக்கு எடுத்துச் செல்வதைத் தடுக்க வேணும் என்ற கோரிக்கையை குறித்த மாகாண ஆளுநர்களிட்ட விடுக்கிறதென்ற தீர்மானத்தையும் நிறைவேற்றும் எனக் கூற, குறித்த இரண்டு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட, அந்நேரம் பார்த்து அந்தத் தீர்மானத்திற்கு தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கஞ்சாவுக்கு அனுமதி...!

இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் கஞ்சாச் செடியை வளர்ப்பதும், விற்பதும் குற்றமாகக் கருதப்படுகிறது. பலரும் சட்டத்துக்குப் புறம்பாக கஞ்சாச் செடியை பயிரிட்டு வியாபாரம் செய்து தண்ட னைக்கு உள்ளாகி உள்ளனர். கஞ்சா பயன்பா ட்டுக்குத் தடை விதிக்கப்பட்டு இருக்கும் நிலையில், தாய்லாந்து கஞ்சாவின் மீதிருந்த தடையை நீக்கி சட்டபூர் வமாக அங்கீகரித் துள்ளது.

இதனால், ஆசியாவிலேயே முதன் முறையாக கஞ்சா பயன்பாட்டை சட்டபூர்வமாக்கிய நாடாக தாய்லாந்து கருதப்படுகிறது.

இனிமேல் தாய்லாந்தில் கஞ்சாச் செடியை பயிரிடுவதும் வர்த்தகம் செய்வதும் மருத்துவ பயன்பாட்டுக் காக கஞ்சாச் செடியின் பாகங்களை உபயோக ப்படுத்துவதும் சட்டப்படி குற்றம் இல்லை.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவே இத்தனை நாட்கள் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அறிவிப்பை பயன்படுத்தி போதைக்காக உபயோகப் படுத்து பவர்கள் மீது சட்டப்படி கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் எனத் தாய்லாந்தின் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித் துள்ளார்,

இதுமட்டும் இல்லாமல் கஃபே மற்றும் உணவகங் களில் கஞ்சா கலந்து தயாரிக்கப்படும் உணவுகள் மற்றும் பானங்களுக்கும் விற்பனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மனோ ரீதியான விளைவுகளை உண்டாக்கும் மூலக்கூறான டெட்ரா ஹைட் ரோகன்னா பினோல் **(tetrahydro cannabinol)** அந்த உணவு பொருட்களில் 0.2 சதவிகிதம் மட்டுமே இருக்க வேண்டும்.

பொது சுகாதார சட்ட அடிப்படையில், பொது இடங்களில் கஞ்சா பிடிப்பது இன்னும் குற்றமாகவே கருதப்படும்.

இவர்களுக்கு கடுமையான தண்டனைகளோடு, மூன்று மாத சிறைவாசமும், 800 டொலர் அபராதமும் விதிக்கப்படும்.

# ஓய்வை அறிவித்த மிதாலிராஜ்

**“மிதாலிராஜின் சாதனைகளைப் பாராட்டி இந்திய அரசு இவருக்கு, தலை சிறந்த வீரர்களுக்குக் கொடுக்கப்படும் அர்ஜுனா விருதை 2003 ஆம் ஆண்டு வழங்கி சிறப்பித்தது. அதைத் தொடர்ந்து இந்தியாவின் நான்காவது மிக உயரிய விருதான பத்மஸ்ரீ விருதையும் 2015 ஆம் ஆண்டு வழங்கி சிறப்பித்தது.”**

1999ஆம் ஆண்டு முதல் (19 வயது முதல்) இந்திய கிரிக்கெட் அணியில் ஆடிவரும் மிதாலி ராஜ், இந்தியப் பெண்கள் கிரிக்கெட்டில் மட்டுமின்றி, ஒட்டுமொத்த கிரிக்கெட் சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்தவர். இந்தியாவுக்காக இதுவரை 12 டெஸ்ட் போட்டி கள், 232 ஒருநாள் போட்டிகள், 89 இருபது-20 போட்டிகள் ஆகியவற்றில் விளையாடியுள்ளார். இவற்றில் மொத்தம் 195 போட்டிகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

இது மட்டுமின்றி, இரண்டு முறை இந்திய அணியை உலகக் கோப்பையின் இறுதிப் போட்டிவரை அழைத்துச் சென்றிருக்கிறார். மகளிருக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 6000 ரன்கள் குவித்த முதல் பெண்ணும் இவரே. ஒருநாள் கிரிக்கெட்டில் மொத்தம் 7805 ரன்கள் அடித்துள் ளார். இவற்றுள் 7 சதங்களும், 64 அரை சதங்களும் அடக்கம். டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவிற்காக இரட்டை சதம் (214 ரன்கள், 2002 இல் இங்கிலாந்துக்கு எதிராக) அடித்த ஒரே பெண் கிரிக்கெட்டரும் இவர்தான்.

இப்படி மகளிர் கிரிக்கெட் உலகில் பல சாதனைகளைப் படைத்த மிதாலி ராஜ் தற்போது அனைத்து வகையான சர்வ தேச போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “எல்லா பயணங்க ளையும் போலவே இந்தப் பயணமும் முடிவுக்கு வந்துள்ளது.

நான் அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் போட்டிக ளில் இருந்தும் ஓய்வு பெறுகிறேன். இந்திய அணியைப் பல வருடங்களாகச் சிறப்பாக வழி நடத்தியதற்குப் பெருமைப் படுகிறேன். ஒவ்வொரு முறையும் நான் களத்தில் இறங்கும் போதும், இந்தியாவின் வெற்றிக்குப் பங்காற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் என்னால் முடிந்ததைச் செய்தேன். நம் நாட்டின் மூவர்ணக் கொடியைப் பிரதிநிதித்துவப்படுத்த எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பிற்காக எப்போதும் பெருமைப்படுகிறேன்.

திறமையான இளம் வீரர்களின் கைகளில் அணி இருப்ப தால், இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் பிரகாசமாக இருக் கிறது. எனவே எனது விளையாட்டு வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவர இதுவே சரியான நேரம் என்று உணர்கிறேன். போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றாலும், பெண்கள் கிரிக்கெட் டிற்கு வேறு வகையில் நிச்சயம் என் பங்களிப்பைச் செலுத்துவேன். என்னுடைய ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர் கள் அனைவருக் கும் என்னுடைய அன்பையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய 2 ஆவது இன்னிங்ஸை உங்களுடைய ஆதரவுடன் ஆரம்பிக்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## சண்டைக்குப் பரிசு!



(நேற்றைய தொடர்ச்சி)

அதற்குள் கறுப்புத் திருடன் கத்தியை அவள் கழுத்தில் வைத்து "நட உன் புருஷன் கதியைப் பார்" என்று அழைத்து வந்தான்.

உடனே அவள் "ஆகா நல்ல வேலை செய்தீர்கள். ரொம்ப நாளாக இவரை இப்படித்தான் தூணோடு கட்டிப் போட வேண்டும் என நினைத்தேன். நீங்கள் அதைச் செய்து விட்டீர்கள்" என்று கூறிக் கை தட்டிச் சிரித்தாள்.

அதைக் கேட்டு திருடர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அந்தக் கணவன்-மனைவி இருவருக்கும் ஒருவருக்கு மற்றவர் பிடிக்காது என்பது உறுதியாகி விட்டது. கறுப்புத் திருடன் அவளிடம் "சும்மா கத்தாதே. மரியாதையாக இருக்கும் நகை, பணம் எல்லாம் கொடுத்து விடு" என்றான். ஆதிமூலம் புன்னகை புரிந்தான். அன்னம் சரியாக மாட்டிக் கொண்டாளே என்பது அவன் சொல்லாமல் சொல்வது போல இருந்தது. அது கண்டு திருடர்கள் மகிழ்ந்து போனார்கள். அவளோ "இந்த வீட்டில் தங்க நகையும் வெள்ளிப் பாத்திரமும் என் கணவர் வாங்கி வைத்திருக்கிறார்.

இருப்பது நாலு தகர டப்பாக்களும் இரண்டு அலுமினியப் பாத்திரங்களுமே. நேற்றுத் தான் சம்பளம் வாங்கித் தன் தலையணைக்குக் கீழ் வைத்திருந்தார். அவரது சம்பளம் என்ன என்று கூட எனக்குத் தெரியாது. நீங்கள் அதை எடுத்து எண்ணிப் பார்த்து எனக்கும் சொல்லுங்கள்" என்றாள்.

அப்போது ஆதிமூலம் "என் சம்பளப் பணத்தை எடுத்துக் கொள்ள இவர்களிடம் சொல்கிறாயா? அப்படியென்றால் இந்த மாதம் முழுவதும் பட்டினி கிடப்பது தான் உன் உத்தேசமா?" என்று தன் மனைவியைப் பார்த்துக் கேட்டான்.


அவளோ "நான் ஏன் பட்டினி கிடப்பேன்? தலை விதியா? உங்களை இங்கேயே விட்டு விட்டு என் பிறந்த வீட்டிற்குப் போய் விடுவேன்" என்றாள் கொக்கரித்துக் கொண்டே.

கறுப்புத் திருடன் ஆதிமூலத்தின் படுக்கைத் தலையணையின் கீழிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு அன்னத்திடம் இப்போது இதை எண்ணிக் கொண்டிருக்க நேரமில்லை. இன்னொரு தடவை நாலைந்து நாட்களுக்குப் பின் வருவோம்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




"வந்தவன் ஒரு சந்தர்ப்பவாதியாகத் தான் இருக்க வேண்டும்; அவனுக்கு அடிப்படையில் நாட்டுப் பற்று இல்லை; அவன் பற்று வேறு: "நாட்டை உம்மிடம் கேட்டுப் பெற்று ஆட்சி செய்ய வேண்டும்" என்று விரும்புகிறான். இராவணனோடு இதற்கு முன் மாறுபட்டவன் அல்லன்; இன்று அவன் வேறுபடுகிறான் என்றால், அவன் ஒரு துரோகியே" என்றான்.

சாம்பவான் வயதில் மூத்தவன்; அனுபவசாலி, ஆர அமர எதையும் சிந்தித்துப் பேசக் கூடியவன். அவன் பழைமைவாதி, சாதிப் பற்று மிக்கவனாய்க் காணப்பட்டான்.

"வந்தவனோ, அரக்க சாதி, நீதியால் வேறுபட்டு, இவன், இங்கு வந்து சேர்கிறான்; ஒருமுறை இவனை ஏற்றுக் கொண்டால் பிறகு அவனை வெளியேற்ற முடியாது. தஞ்சம் அடைந்தவனை எக்காரணத்தைக் கொண்டும் வஞ்சகன் என்று தள்ள முடியாது; மாரீசன் பொன்மானாய் வந்து நம்மை மயக்கினான்; இவன் நன்மகனாக வந்து நடிக்கிறான். இருவருக்கும் வேறுபாடு கிடையாது" என்றான் சாம்பவான். "தெருவிலே போகிற வம்பை யாரும் விலைக்கு வாங்கமாட்டார்கள். தொடக்கத்தில் இவன் நல்லவனாக நடிப்பான்; ஏமாறும் போது இவன், தன் பாடத்தைப் படிப்பான்; இவன் ஒரு ஓட்டைப்படகு.

இவனைக் கொண்டு நாம் கரையேற முடியாது; நட்டாற்றில் தள்ளி விட்டுத் தன் நாயகனிடம் போய்ச் சேர்ந்து விடுவான்" என்று நீலன் ஓலமிட்டான். இராமன் மாருதியை அழைத்தான்; மாற்றுக் கருத்து இருந்தால் உரையாற்றலாம் என்றான்.

அரசியல் அறிந்த அனுமன், "இவனைத் தூயவன் என்றோ, தீயவன் என்றோ அவசரப்பட்டு முடிவு செய்ய இயலாது; இவனுக்கு ஏதோ ஓர் உட்கருத்து இருக்க வேண்டும்."

"நாட்டிலே பரதனுக்கும், காட்டிலே என் தலைவனுக்கும் ஆட்சி தந்திருக்கிறாய்; இங்கே தக்க சமயத்தில் வந்து முந்திக் கொண்டான் இவன்; இலங்கை தனது ஆகும் என்ற ஆசையால் வந்திருக்கலாம்.


ஆட்சி காரணமாய் வந்திருக்கலாம்; ஆசை யாரை விட்டது?" "இவன் நல்லவனா? கெட்டவனா? என்பதை அறிவது, அறிய விரும்புவது தேவை இல்லை; அது பள்ளியாசிரியர்தான் சான்றிதழில் எழுத வேண்டும்;இது பகைப் புலம்; அதனால், நமக்கு நன்மையா தீமையா? என்று முடிவு செய்வதுதான் நல்லது" என்றான்.

"நாமாக விரும்பி அவனை நயக்கவில்லை; அவனாக வந்தால் அவனை பயன்படுத்துவதில் தவறு இல்லை." "இவன் எந்தக் கட்சி? யாருக்கு இவன் எதிர்க் கட்சி? இவன் முன் சரித்திரம் என்ன? இவற்றை அறிந்து கூறுகிறேன்".

"இவனை இலங்கையில் கண்டு இருக்கிறேன்; கள்ள அரக்கர் மத்தியில் வெள்ளை உள்ளம் படைத்தவன்; அரச நீதி அறிந்தவன்; தூதுவனாகச் சென்ற எனக்குத் துயர் விளைவிக்கவிடாமல் தடுத்தவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சம் மக்களை வாட்டிவதைக்கிறது, ஜனா பதி பதவி விலக மறுக்கிறார் எனின்...?






எனக்கும் என் காதலிக்கும் பயங்கர சண்டை.இப்போது நான் என்ன செய்வது?

**சேந்து — வவுனியா**

**மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளாதவர்களுடன் பேசிப் பயன் என்ன வியாசரே?**

கோள் மூட்டுவதை எமது ஊரில் கூறுவார்கள் "சொண்டு சொல்வது"என்று.

இப்படிப்பட்டவர்கள் இருக்கு இடம் நாசமாய்ப் போகும் என்பதே நிதர்சனம்.

**சிவம் — வடமராட்சி**

**பட்டினியால் மக்கள் மரணிக்கும் நிலை வருமா வியாசரே?**

தென்னிலங்கையில் இவ்வாறான ஒரு நிலை பதிவாகியிருக்கிறது.

தனது மூன்று பிள்ளைகளுக்கும் மூன்று நாட்கள் உணவு கொடுக்க முடியாத தாய், பிள்ளைகள் பசியால் வாடுவதைத் தாங்க முடியாமல் நஞ்சருந்தி தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார்.

இது இந்த நாட்டின் ஆட்சியாளர்களின் சீத்துவக் கேட்டை எடுத்தியம்பும் முதலாவது பதிவு.

கொஞ்சம் பொறுத்திருங்கள் இன்னும் பயங்கரமான பதிவுகள் காத்திருக்கின்றன என்ற செய்தியே உண்மையானது.

**எக்ஸ்.வைசந் — யாழ்ப்பாணம்**

**எனக்கும் என் காதலிக்கும் பயங்கர சண்டை.இப்போது நான் என்ன செய்வது?**

திருமணம் முடிந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன.

கணவன் மனைவியிடம் கேட்கிறான்.எமது பதிவுத் திருமணத்தன்று நான் கையெ முத்துப் போடப் போகும்போது ஏதோ எனது காதில் சொன்னீர்களே?என்ன சொன்னீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு உண்மையாக உங்களுக்கு நான் சொன்னது கேட்கவில்லையா என்று கேட்டார் மனைவி.

சத்தியமாக கேட்கவில்லை இப்போது சொல்லுங்கள் என்ன சொன்னீர்கள்? ஆர்வத்துடன் கேட்கிறான்.

அதற்கு மனைவி சொல்கிறாள். இப்போதும் கெட்டுப் போகவில்லை. கையெழுத்து போடமுன்னம் வடிவாக யோசித்து போடுங்கோ என்று தான் கூறினேன் என்றார்.

அட கடவுளே அதை சத்தமாக கூறியிருக்கலாமே அன்றே நான் தப்பி ஓடியிருப்பேனே என்றான் கணவன் அப்பாவியாக.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
021 567 1532
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
அல்லது ஆசிரியர், வியாசர் பதிவுகள், வலம்புரிப் பத்திரிகை, இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**என்னை வெல்ல யாரும் இல்லை என்ற அகங்காரம் கொண்டவர்களுக்கு தாங்கள் சொல்ல விரும்புவது?**

இந்த உலகில் தன்னை வெல்ல முடியாது என்ற அகங்காரம் கொண்டவர்கள் அழிந்ததே வரலாறு.

அதை உணராதவரை யாரும் எதுவும் செய்துவிட முடியாது.

சமீபத்தில் கூட வெற்றி வெற்றி என்று ஆட்டம் போட்டவர்கள் குப்புற வீழ்ந்ததை கண்டீர்கள் தானே.

மமதை என்பது மனிதம் கடந்த மிருகம்.அது ஒருவரிடம் வந்துவிட்டால் அவனின் அழிவுக்கு திகதி குறிக்கப்பட்டுவிட்டது என்றே பொருள்.

**குமார் — யாழ்ப்பாணம்**

**நாட்டியம் ஆடுகின்றோம்...இப் பாடலின் வரிகளின் அர்த்தம் என்ன வியசரே?**

நாட்டியம் ஆடுகிறேன் என்றால் அது ஒருமை.அவர் தனிய ஆடுவார்.

நாட்டியம் ஆடினார்கள் என்றால் அது பன்மை.அதிலும் அது இறந்த காலம்.

நாட்டியம் ஆடுகிறோம் எனின் இதுவும் பன்மைதான் ஆயினும் நிகழ்காலம்.

ஆடட்டும் ஆடட்டும் நன்றாக ஆடட்டும்.

**இதழினி — புலோலி**

**பழகப் பழக பால் புளிக்கும்.இப்போது பாசமும் புளித்துப் போகிறதே. காரணம் என்ன?**

பணம் ஒன்றே இன்றைய உலகின் முதல்வன். ஒருவரிடம் பணம் இருந்தால் அவரைச் சுற்றி ஆயிரம் பேர் துணை நிற்பார்கள்.

அதே அவரிடம் பணம் இல்லாது போனால் செத்த நாயில் உண்ணி கழன்ற கதையாய் விலகிச் சென்று விடுவார்கள்.

அந்த உண்ணிகள் வேறு எங்கு போய்விடப் போகிறது.

இன்னும் ஒரு பணக்கார நாயிடம் ஒட்டிக் கொள்ளுங்கள்.

எப்போதும் எம்முடன் காடுவரை கூட வரக் கூடிய சொந்தங்களை சேர்த்துவைப்பதே மிகச் சிறந்தது.

**மதன் — ஏழாலை**

**இலங்கை அரசியல் உப்புச் சப்பற்று வெறுப்பாய் இருக்கிறதே?**

உண்பதற்கு உப்புக் கூட இல்லாத நாடு வேறு எப்படி இருக்கும்?

தமது அரசியல் சுயலாபங்களுக்காக நாட்டை அடகு வைக்கும் அரசியல் வாதிகள் இருக்கும் நாடு வேறு எப்படி இருக்கும்?

ஒரு இனத்தை வதைத்து அவர்களைக் கொன்றொழித்த நாளை வெற்றி விழாவாகக் கொண்டாடும் ஆட்சியாளர்கள் இருக்கும் நாடு வேறு எப்படி இருக்கும்?

நாட்டு மக்களின் பணத்தைச் சுரண்டி கொள்ளையடித்து சொத்துச் சேர்த்த தலைவர்கள் உள்ள நாடு வேறு எப்படி இருக்கும்?

சொல்லுங்கண்ண சொல்லுங்க...

**சுதன் — குப்பிளான்**

**பஞ்சம் மக்களை வாட்டிவதைக்கிறது, ஜனாதிபதி பதவி விலக மறுக்கிறார் எனின்...?**

என்ன செய்ய முடியும். இது மக்கள் எனக்குத் தந்த ஆணை. நான் பதவி விலகி தோற்றுப் போன ஜனாதிபதியாக இருக்க விரும்பவில்லை.

எனக்கு மக்கள் தந்த ஆணையின்படி எனது ஆட்சிக் காலம் முழுவதும் நான் ஜனாதிபதியாக இருப்பேன்.

அதுவரை பதவி விலகும் எண்ணம் என்னிடம் இல்லை என்று ஜனாதிபதி மிகத் தெளிவாகக் கூறிவிட்டார்.

இனி என்ன கடையைப் பூட்டிவிட்டு வேலையைப் பார்க்க வேண்டியது தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

அன்று மாலையே - இவ்வளவு விரைவாக - அடுத்த சம்பவத்துக்கு முகாம் தயாராகியிருக்கத் தேவையில்லை. என்றாலும், அல்பா கம்பவுண்டிலிருந்த கடவுளுக்கு வந்த கோபம், அதனைச் சாத்தியமாக்கியிருந்தது.

"கடவுள்" என்றவுடன் குழம்பிவிடாதீர்கள். அல்பா கம்பவுண்டில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சக கைதிகள் அவனுக்கு வைத்திருக்கும் பெயர் "கடவுள்"

அனைவரும் பௌத்தத்தைப் பின்பற்றுபவர்கள் என்று அறிவித்துப் பெரும் கட்டமைப்பை உருவாக்கினார்.

அன்று தேங்காய் வியாபாரத்துக்காக தலைநகர், சித்துவி பக்கமாகத் தனது தகப்பனோடு போன, கடவுளின் மூத்த சகோதரியை வரும் வழியில் பிக்குகள் குழுவொன்று கைது செய்தது. அவர்கள் கைதுசெய்யப்பட்ட வயற்கரையோரமாகப் பொலிஸ் வாகனமொன்று பாதுகாப்புக்கு நின்று கொண்டிருந்தது. அதிலிருந்தவர்

கரப்பு வண்டிலுக்குள் மூர்ச்சையுற்று விழுந்தார்.

நகரத்துக்குப் போன தகப்பனையும் சகோதரியையும் காணவில்லை என்று இரண்டு நாட்களாகத் தேடித்திருந்த கடவுள், பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்வதற்கு அச்சத்தில், அயலவர்களிடம் தகவல் சொன்னான். இரண்டு நாட்களுக்கு முன்னர், அவர்களை வயற்கரையோரமாகப் சிலர் நிறுத்திவைத்து விசாரித்ததைச் சிலர் கண்டதாகச் சொன்னார்கள்.


ஊர் பெரியவர்கள் லாந்தர்களோடு வந்து, இரவில் யோசனை சொல்லிவிட்டுப் போனார்கள்.

இருளும் துயரும் பசியும் எப்போதும் நிறைந்து கிடக்கும் அந்த வீட்டில், இரண்டு நாட்களாக அச்சத்தின் நாற்றமே குமட்டிக் கொண்டிருந்தது. அதனை ஜீரணிப்பதற்கு ஒருவர் போதுமென்று நினைத்தாளோ என்னவோ? ஒருநாள் காலை, சமையலறைத் தாழ்வாரத்தில் கடவுளின் சகோதரியின் சுருக்கிட்டுத் தொங்கிய சடலத்தை ஒப்பாரி வைத்தபடி அவிழ்த்து இறக்கினார்கள் அயலவர்கள்.

கடவுளுக்குக் கண்ணீர் வரவில்லை. ஊரின் அடுத்த முனையிலிருந்த மையத்தில் சகோதரியை அடக்கம் செய்வது என்று கடவுள் முடிவெடுத்தான். இறுதி நிகழ்வுக்கு மதப்பெரியார்கள் வந்தார்கள். அயலவர்கள் பெரும் எண்ணிக்கையில் தூர இடங்களிலிருந்தும் வந்து சேர்ந்தார்கள். சகோதரியின் சடலத்தோடு, வைக்

**ஐந்து நாட்களாகத் தேடிய பின்னர், தலைவெட்டப்பட்ட தகப்பனும் உருக்குலைந்த சகோதரியும் தேங்காய் மட்டைகள் போட்டு நிரப்பப்பட்ட வயல் கிணறொன்றிலிருந்து மீட்கப்பட்டனர். இறுதி நிகழ்வு எதுவும் செய்யாமல் சடலங்களைப் புதைத்துவிடும் படி அயலவர்கள் ஆலோசனை சொன்னார்கள். இன்னொரு பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு, இறுதி நிகழ்வினைச் செய்து...**

## வலி சொல்லும் தொடர்... 34


ஜூனியர் விகடன்

அவனொரு ரொஹிங்கிய அகதி. பர்மாவில் மதவெறியர்களினால் சூறையாடப்பட்ட ரக்கீன் என்ற சிறிய கிராமத்தைச் சேர்ந்தவன்.

பர்மாவின் வறிய பிரதேசங்களில் ஒன்றான ரக்கீனில், கடவுள் தனது இரண்டு சகோதரிகளுடனும் தகப்பனுடனும் வசித்து வந்தான். தாய் சிறுவயதிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டாள்.

தேங்காய் வியாபாரம், இவர்களது குடும்பத்துக்கு பிரதான வரும்படியாக அமைந்திருந்தது.

கடவுளது குடும்பம் இஸ்லாம் மதத்தை பின்பற்றுபவர்கள். அதுதான், அவர்களுக்கிருந்த மிகப்பெரிய பிரச்சினையே.

பர்மாவில் நெடுங்காலமாகப் புகைந்துகொண்டிருந்த பௌத்த சக்திகளின், முஸ்லிம் மக்களுக்கு எதிரான வெறியாட்டம், இரண்டாயிரங்களுக்குப் பிறகு உச்சத்தை அடைந்தது. இனவாதத் தேசப்பற்று இயக்கம் ஒன்றை ஆரம்பித்த பிக்கு ஒருவர், இஸ்லாமிய மக்களை நாட்டைவிட்டுத் துரத்த வேண்டும் என்ற கொள்கையோடு பிரசாரங்களை மேற்கொண்டு வந்தார். பெரும் எண்ணிக்கையான இளைஞர்களை தனது அமைப்புக்குத் திரட்டி, அவர்கள்

கள், நடைபெற்றுக்கொண்டிருந்த சம்பவத்தைத் திரும்பியும் பார்க்கவில்லை.

எந்த இடத்திற்கும் பர்தா அணியாமல் போய் வருவதையே வழக்கமாகக் கொண்டிருந்த கடவுளின் சகோதரி, அன்றைக்கும்கூட வெகு சாதாரணமாகத்தான் உடையணிந்து தகப்பனோடு போயிருந்தாள்.

விற்றுத்தீர்ந்த தேங்காய் கரப்பு வண்டில், கடவுளின் தந்தையாரின் மோட்டார் சைக்கிளின் பின்னால் கட்டியிருந்தது. அந்தக் கும்பலைக் கண்டதும் சற்றுத் தடம்புரண்டு வயற்கரைப் பக்கமாகச் சரிந்து நின்றது. இருவர், கடவுளின் தகப்பனை விசாரித்துக்கொண்டிருந்தபோது, கறுத்த உதடுகளுடைய இடுப்பில் கத்தி செருகியிருந்த மூன்று பேர், கடவுளின் சகோதரியை வயலுக்குள் வரும்படி அழைத்துச் சென்றார்கள்.

ஆளளவுக்கு வளர்ந்து கதிர்முற்றியிருந்த வயல் அச்சத்தோடு காற்றுக்கு அசைந்தாடிக் கொண்டிருந்தது.

கடவுளின் தகப்பனார், தானும் மகளுடன் வருவதாக உரக்கச் சொன்னார். எந்தப் பதிலும் சொல்லாமலேயே ஒருவன் ஓங்கி அறைந்ததில் [illegible]

கடவுளின் இளைய சகோதரி, வீட்டுச் சுவரில் தலையை அடித்து அடித்துக் குழறினாள். ஏதோ தவறு நடந்திருக்கிறது என்ற அச்சத்தில் அவளுக்கும் கடவுளுக்கும், உடம்பெல்லாம் பதறியது.

ஐந்து நாட்களாகத் தேடிய பின்னர், தலைவெட்டப்பட்ட கடவுளின் தகப்பனும் உருக்குலைந்த சகோதரியும் தேங்காய் மட்டைகள் போட்டு நிரப்பப்பட்ட வயல் கிணறொன்றிலிருந்து மீட்கப்பட்டனர்.

இறுதி நிகழ்வு எதுவும் செய்யாமல் சடலங்களைப் புதைத்துவிடும்படி கடவுளின் அயலவர்கள் ஆலோசனை சொன்னார்கள். இன்னொரு பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு, இறுதி நிகழ்வினைச் செய்து, 'வீணாகப் அவர்களின் [illegible] வேண்டாம் என்று

கோல் அடைத்த இரண்டு பொம்மைச் சடலங்களுக்கும் மதச் சடங்குகளைச் செய்வித்தான். ஒன்றரை மணிநேரம் சுமந்து சென்று சிதைமூட்டிய, இறுதிச் சடங்கினை சிலர் பார்த்துக் கொண்டிருந்ததை ஊரே கவனித்தது.

இதனைக் கவனித்த பலர், இறுதி ஊர்வலத்தை நிறைவுசெய்யாமலேயே அரை வழியில் கழன்று விட்டிருந்தனர். முதியவர்கள் சிலர் மாத்திரமே மையவாடி வரைக்கும் வந்தனர்.

அன்றிரவு கடவுளின் வீட்டுப் பக்கம் யாரும் போகவில்லை. அந்த வீடு அயலவர்கள் எல்லோருக்கும் தீராத அச்சத்தை உமிழ்ந்தபடி தெரிந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நள்ளிரவு கடந்த பின்பும்...

ஒரு நாள் காலசக்கரம்
அதிகாலை நேரம்
மெல்லிய குளிர்
பாதி உறக்கத்தின்
விளிம்பில் உலகம்...

பறவைகள் இரை
தேடலுக்காய் - தம்
இறகுகள் துடைக்கும் சப்தங்கள்...


கீற்றுக்களாய் வெளிச்சம்
கதிரவன் உதயம்
உலகம் எனும் இயந்திரம்
ஆர்முடுக ஆரம்பிக்கும்...

அந்தி சாயும் நேரம்
வானம் சாயங்கள் பூசும்
பறவைகள் தம் கூடு திரும்பும்
இனி ஓய்வுக்கான நேரம்
வெண்ணிலா வருகை

ஆங்காங்கு விண்மீன்களின்
ஒளிக்கீற்று...
அமைதியெனும் ஓசை
வெள்ளத்தில் உலகம்
மோகன இராகம்
மீட்டும் நேரம்...
தூக்கத்தில் உலகம்
இருந்தும் உயிர்ப்புடன்
சில உயிரினங்கள்
நள்ளிரவு கடந்த பின்பும்...

பருத்தியூர்
பார்த்தன்.

## ஒழிந்து விட வைப்பவரே வாரீர்



கல்லடியார் கவி எறிந்த காட்சி
பொல்லடிகோல் போக வழி ஆச்சோ?
வெல்ல முடியா கஞ்சம் வரவாகும்
சொல்ல முடியாத் துயரேன் நமக்கு?

இல்லை இல்லை என்று சொல்லி பசி
தொல்லை தனை விரட்டி விடு இங்கு
எல்லை மீற விடா வாழ்வை அன்று
செல்வமெனக் கொண்டு வந்த வாழ்வு?

உலகெங்கும் பிச்சைபிடி பிடி என்று
அலறிப்புலம்பும் நிலை கண்டோம் இனி
விலகி விடுமாறு பஞ்சம் தன்னை விரட்டி
ஓடவிடும் அமைச்சர்களே வேண்டும்.

புகழோடு புகழ் சேர்ந்த நாடாய் இருந்து
அகமகிழ்ந்த காலமதை நினைத்தால் ஆட்சி
அரசியலால் வந்த துயர் யாவும் ஓடி
ஒழிந்து விட வைப்பவரே வாரீர்.

வளவை விளவன்
கிளிநொச்சி

## அவன் வாழ்வு மலர வழி தான் என்ன?

கந்தை அரை இறக்கி
காடு களைந்து
களனி சமைத்து
நாற்புறமும் தோற்றி
நாற்றம் அழைந்தான்
நம் நல்வுக்காய்
அவன் சிந்திய
வியர்வைத் துளிகள்
பாரெங்கும் ஓடி
பசுமை தெரியுதையா
பாவி அவனுக்கோ
பசி ஆற உணவில்லை
மாடாய் உழைத்தான்
மாளிகையில் நாம் வாழ
ஓடாய் தேய்ந்தவனுக்கு
ஒதுங்க இடமில்லை ஐயா
வாழவிட்டு வாழ்ந்தவனுக்கு
வறுமை புகை ஐயா
ஓலை குடிசை கட்டி
ஒதுங்கும் அவன்
வாழ்வு மலர வழிதான்
என்ன பணம் படைத்த
தனவான்களே...

எஸ்.கலாமணி,
மண்டைதீவு.

## மௌனத்தின் தேடல் –563



## அன்னை நாட்டுக்கு

மாலை முழுதும் விளையாட்டு
மகிழப் பாரதி கவிதந்தார்
காலை நடை தொடங்கின் மாலை
காணும் வரையும் உடற்பயிற்சி
வேலை யாவும் விளையாட்டாய்
விளைந்த வியர்வை நோய் வாரா
ஆலைக்கரும்பாய் உழைத்திடினும்
அன்னை நாட்டுக்கு நாமே மூலதனம்

வைகதன்
கொக்குவில்

## மீட்டிப் பார்த்தேன்

ஓடி ஆடி உளமகிழ்ந்து
உறவு கொண்டு கிட்டியடித்து - வசையுடன்
பேசிய வார்த்தைகள் எலாம்
நினைவுப் போர்வைக்குள் இன்று

அடிக்கடி மீட்டிப் பார்க்க தான் முடிகிறது
நிஜ காட்சியாய் நீட்டிப் பார்க்க முடியாதே
என்ற ஏக்கம் ஊசலாடியபடியே
நகரும் நான்

சிலக்சிகா-ய
கரவெட்டி

## சிந்திப்பார்களோ?

சிறுவர்களின் வயதினில்
சிறப்பாக விளையாட்டுகளுமே
சிறந்த பயன் தருபவனவாய்
அமைந்திட
வேண்டுவதோடு
அவர்களின் உடல்- உள வளர்ச்சியிலும்
அறிவின் கல்வி உயர்ச்சியிலும்
ஆர்வம் பெற்றிடனும்

தங்கத்தமிழன்
காரைநகர்

## இக்காலம் நினைப்பினும்

கிட்டி புள்ளு விளையாட்டு
எட்டி தடுக்கும் கிளித்தட்டு
தொட்டு ஓடும் வாரோட்டம்
வட்டமோடும் பந்தாட்டம்
வலிக்க எறியும் எறி பந்தாட்டம்
தட்டாது உழைக்கும் உடல் கூட
தக்க நலமோடு வாழ்விக்கும்
இக்காலம் நினைக்க எலாம் இன்பம்

வை.க.தவமணிதாசன்
நல்லூர்

## சித்திரம் பேசும் பழைமை

இளமைப்பருவம் தனை
இனிமை பொழுதாக களித்திடவே
வெயிலோடும் மழையோடும் போராடி
நல்ல நட்போடு உறவாடி
கைகள் தனில் கிட்டிப்புல்லை ஏந்தி
களத்தில் இறங்கி வீரச்சாதனை படைத்த
காலங்கள் கானல் நீராய் கனவாகி
போனது தான் ஏனோ?

ஆ.பாலமதுஜா
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## மௌனத்தின் தேடல் –564



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி – சங்குநாதம்
இல.03,9 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## மருவிப் போன விளையாட்டு

ஊனமுற்ற நெஞ்சங்களுக்கு
உயிர் கொடுத்த விளையாட்டுக்கள்
உருப்பெற்ற தடம் இன்றி
ஊமையாகிப் போய் விட்டதே!
தகராறு பண்ணும் இவ்வுலகில்
தத்தளிக்கும் மனிதர்களுக்கு
தைரியமூட்டி உயிர்கொடுக்க
மூச்சுக்காற்றாய் எழுந்து வா
கிட்டிப்புல்லே!

ஜெ.ஜெறிஸ்
யா/ஊர்காவற்றுறை
றோ.க.த.ஆ.பாடசாலை
தரம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிகழ்ச்சியின் புரட்சி

# கடல் புறா

பலமுறை அதை நான் மிதித்து மீண்டியிருக்கிறேன். இன்றிரவு நடனத்துக்கு வருகிறேன். மற்ற விடயங்களை நாளை பேசிக்கொள்வோம் என்று கூறிவிட்டு மஞ்சளழகியையும் தலை தாழ்த்தி வணங்கிவிட்டு அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த மஞ்சளழகியின் முகத்திலும் பலவர்மன் முகத்திலும் பெரும் திகில் விரிந்தது. அவன் அன்றிரவு நிகழ்ச்சிக்கு வந்தால் அவன் மரணம் நிச்சயம். அவன் மாண்டால் அகூதாவினால் கோட்டையின் அழிவு நிச்சயம். இந்த இரண்டு நிச்சயங்களையும் எண்ணி எண்ணித் திகிலுக்கு உள்ளானார்கள் அவ்விருவரும். ஆனால் அன்றைய இரவு நிகழ்ச்சி பெரும் புரட்சியாயிருந்தது. அவர்கள் நினைத்தது வேறு. நடந்தது வேறு. நடந்தது ஒரு கொலை, விளைந்தது வேறு நிலை.

## மித்திரபேதம்

பலவர்மனும் மஞ்சளழகியும் இரவு நடனக் காட்சியில் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளைப் பற்றிப் பலப்பல விதமாகப் பயமுறுத்தியும், அந்த அச்சுறுத்தலைப் பற்றி அணுவளவும் எண்ணிப் பார்க்காமல், "எப்படியும் இன்றிரவு நடன நிகழ்ச்சிக்கு வருகிறேன்" என்று திட்டமாகக் கூறிவிட்டு அவர்களிருந்த அறையை விட்டு வெளியேறிய இளையபல்லவன், விடுவிடு வென்று அக்கோட்டையின் தெருக்களில் நடந்து கடற்கரையை நோக்கி விரைந்தான்.

அவன் கோட்டைத் தலைவன் அறைக்குள் நுழைந்து நீண்ட நேரம்ஆகிவிட்டதை நினைத்து அவன், அதற்குமேல் வெளிவர வழியில்லையென எண்ணி அவனுக்கு ஒரு முடிவு கட்டிவிட்ட அரண்மனைக் காவலர், அவன் வெகு வேகத்துடன் வெளிபோந்ததும் சில விநாடி திக்பிரமை பிடித்து நின்று விட்டனர்.

அந்த அரண்மனை வீதியில் சதா நடமாடிக் கொண்டிருந்த மற்ற வீரர்களும் இளையபல்லவன் சொந்த வீட்டிலிருந்து வெளியே வருபவன் போல் சர்வசகஜமாக வெளிவந்ததும், பிறகு அவனே கோட்டையின் சொந்தக்காரன் போல் யாரையும் லட்சியம் செய்யாமல் நடந்து சென்றதையும் கண்டு அத்தகைய விசித்திரம் அந்தக் கோட்டையிலும் நிகழ்ந்ததைப் பார்த்து மலைத்து வாயைப் பிளந்து கொண்டு நின்றனர்.

அவன் கோட்டை மதிலை அணுகிக் கோட்டை வாயில் வழியாக வெளிச் சென்றபோதும், அங்கிருந்த கோட்டை மதில் காவலர் முதலிலெறிந்ததைப் போல் அவன் மீது அம்பெறியாமலும், அவனை எந்த விதத்திலும் தடுக்காமலும் நின்றதன்றி அவன் எந்த ஜாலவித்தையால் கோட்டைத் தலைவனிடமிருந்து தப்பி வந்திருக்க முடியும் என்பதை எண்ணி எண்ணி விடை தெரியாமல் வியப்பின் வசப்பட்டுச் செயலிழந்து நின்றார்கள்.

கோட்டை வாயிலைக் கடந்து அவன் கடற்கரை மணலில் பிரவேசித்த போது சூரியன் உச்சிக்கு ஏறி, காலையிலிருந்த உஷ்ணத்தை விடப் பன்மடங்கு அதிக உஷ்ணத்தை எங்கும் வீசித் தகித்துக் கொண்டிருந்ததும், அத்தனை உஷ்ணத்தையும் சட்டை செய்யாத கடற்கரை வாசிகள் மீண்டும் குடிசைகளிலிருந்து அவனை நோக்கி ஓடிவந்து சூழ்ந்து கொண்டார்கள்.

யவனர், அராபியா, சீனர், தமிழர் எனப் பலவிதமான பிரிவுகளுடைய அந்தக் கூட்டம் அவன் கடற்கரையில் காலையில் கால் வைத்த போது அவனைத் தீவிர விரோதத்துடன் சந்தித்ததென்றால், அந்த உச்சி நேரத்தில் மிகுந்த சந்துஷ்டியுடனும், குதூகலத்துடனும் சந்தித்துப் பெரும் மகிழ்ச்சிக் கூச்சலை இட்டது.

கலிங்கத்தின் தங்கக் கப்பலைக் கொள்ளையடிக்கலாமென அவன் காலையில் ஆசை காட்டியதை அந்த மாலுமிகள் மறக்கவில்லை. அவர்களது மனைவிமார்களும் மனைவிமார்களைப் போல் அவர்களுடன் வாழ்ந்து வந்த மற்ற பலதரப்பட்ட பெண்களும்; அந்தக் கொள்ளையில் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆடையாபரணங்களை நினைத்துப் பெரும் கொம்மாளமிட்டார்கள். இளையபல்லவரிடம் நம்பிக்கையும், அந்தக் கூட்டத்துக்குப் பெரிதும் வலுத்திருந்தது. விஷ அம்பு மார்பில் பாய்ந்தும் மாளாத அவனிடம் ஏதோ ஒரு தெய்வீக சக்தி நிச்சயம் இருக்கிறது என்பதை நினைத்தது அந்தக் கூட்டம். அவன் கோட்டைத் தலைவன் மாளிகையிலிருந்து வெளிவந்ததைப் பிரமிக்கத் தக்க ஒரு விடயமாக மதிக்கவேயில்லை.

விஷ அம்பு தைக்க முடியாத மார்பை உடையவனை யாரும் கொல்ல முடியாது என்ற தீர்மானத்துடனிருந்த அந்த மாலுமிக் கூட்டமும் மாதர் கூட்டமும் அவனைச் சுற்றி வளைத்துப் பல கேள்விகளைக் கேட்டார்கள்.

"கோட்டைத் தலைவர் என்ன சொன்னார்?" என்று சிலர் கேட்டார்கள். "நீங்கள் இங்கு தங்குவது நிச்சயம் தானே?" என்று மற்றும் சிலர் கேட்டார்கள். "கலிங்கத்துக் கப்பல் எப்பொழுது வரும்? எந்தத் திசையில் வருகிறது?" என்று இன்னும் சிலர் கேட்டார்கள். "அதில் காஷ்மீரத்துப் பட்டிருக்குமா? தமிழகத்துக் காசு மாலை இருக்குமா?" இப்படி இரு பெண்கள் கேட்டார்கள். அவரவர்களுக்குத் தேவையானதை அவரவர்கள் கேட்டர்கள்.

மிகுந்த கொடூர அநாகரிக வாழ்க்கையிலும் ஆசை உந்தியதால் குழந்தைகளைப் போலக் கேள்விகளைக் கேட்க அந்தக் கூட்டத்தினர் மீது தன் விழிகளைப் பல திக்குகளில் திருப்பிய இளையபல்லவன் அவரவர்களுக்கு இனிப்பான பதில்களைச் சொல்லிக்கொண்டே நடந்தான்.

"நான் உங்களை விட்டு எங்கும் செல்லப்போவதில்லை. கலிங்கத்தின் கப்பல் சீக்கிரம் வரும், நாம் சேர்ந்து அதைக் கைப்பற்றுவோம்" என்று மாலுமிகளுக்கும், "காஷ்மீரப் பட்டு என்ன, உலகம் புகழும் தமிழ்நாட்டு மெல்லிய வெள்ளைச் சல்லா, காசுமாலைகள், மகர கண்டிகள், இன்னும் புதுப்புது நகைகள் எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும்," என்று மாதர்களுக்கும் மாறி மாறிச் சொல்லிக் கொண்டு நீர்க்கரையை நோக்கி நடந்தான் இளையபல்லவன்.

அவன் சொற்களைக் கேட்டுக் கொண்டே அவனைச் சூழ்ந்தும், தொடர்ந்தும் வந்த அந்தக் கடற்கரை மாலுமிகள் கூட்டத்தை, நீர்க்கரையை அடைந்ததும் அங்கிருந்த தனது படகில் ஏறு முன்பு திரும்பிப் பார்த்த இளையபல்லவன், சில விநாடிகள் மௌனமாக நின்றான்.

நீர்க்கரையை அடைந்ததும் அவன் சட்டென்று நின்றதும், படகில் ஏறாமல் தங்களை நோக்கித் திரும்பியதையும் கவனித்த மாலுமிகள் கூட்டம் அவன் ஏதோ சொல்ல முயல்கிறானென்பதைக் கண்டதும் சட்டென்று கூச்சலை அடக்கிக் கொண்டது. இளையபல்லவனின் காந்தக் கண்கள் அந்தக் கூட்டத்தை நன்றாக ஊடுருவிப் பார்த்தன. அந்தப் பார்வையால் ஸ்தம்பித்துவிட்ட கூட்டத்தை நோக்கி அவன் இதழ்களிலிருந்து திடமான வார்த்தைகள் உதிர்ந்தன. "நீங்கள் சிறந்த மாலுமிகள் என்பதைப் புரிந்து கொண்டேன்" என்று தொடங்கினான் இளையபல்லவன்.

அந்தக் கூட்டத்திலிருந்து அதற்குப் பதிலேதும் வரவில்லை. அவன் மேற்கொண்டு என்ன சொல்லப் போகிறானென்பதை எதிர்பார்த்து நின்றார்கள் அந்த மாலுமிகள். இளையபல்லவன் வார்த்தைகள் இரும்பைக் கொண்டு இரும்பிலடித்தால் ஏற்படக்கூடிய தொனியுடனும் உறுதியுடனும் மீண்டும் கிளம்பின. "உங்களை வீணாகப் புகழவோ உங்கள் தயவைச் சம்பாதிக்கவோ நான் இதைச் சொல்லவில்லை. யார் தயவும் எனக்குத் தேவையுமில்லை. நான் அகூதாவின் உபதலைவன். என்னுடைய தாரைகள் ஊதப்பட்டதிலிருந்தே அதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்," என்றான் இளையபல்லவன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும், அந்தக் கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. சிலர் பயத்தால் நடுங்கவும் செய்தார்கள். அந்தப் பயத்தை தூண்ட மேற்கொண்டு சொன்னான் இளையபல்லவன், "உங்கள் கோட்டைத் தலைவன் என்னைக் கொல்லவில்லை சிறை செய்யவில்லை மீண்டும் சுதந்திரமாக நான் எனது கப்பலை நோக்கிப் போகிறேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : வசந்தமாளிகை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன்



குடிப்பதற்கு ஒரு மனம் இருந்தால்
அவளை மறந்து விடலாம்
அவளை மறப்பதற்கு
ஒரு மனம் இருந்தால்
குடித்து விடலாம்
ஆனால் இருப்பதோ ஒரு மனது
நான் என்ன செய்வேன்
என்ன செய்வேன்

இரண்டு மனம் வேண்டும்
இறைவனிடம் கேட்பேன்
நினைத்து வாட ஒன்று
மறந்து வாழ ஒன்று (2)
இரண்டு மனம் வேண்டும்

சிறிய காயம்
பெரிய துன்பம்
ஆறும் முன்னே அடுத்த காயம் (2)
உடலில் என்றால் மருந்து போதும்
உடலில் என்றால் மருந்து போதும்
உள்ளம் பாவம் என்ன செய்யும்

இரண்டு மனம் வேண்டும்
இறைவனிடம் கேட்பேன்
இரண்டு மனம் வேண்டும்

இரவும் பகலும்
இரண்டானால்
இன்பம் துன்பம் இரண்டானால் (2)
உறவும் பிரிவும் இரண்டானால்
உள்ளம் ஒன்று போதாதே
இரண்டு மனம் வேண்டும்..

கண்களின் தண்டனை
காட்சி வழி
காட்சியின் தண்டனை காதல் வழி (2)
காதலின் தண்டனை கடவுள் வழி
காதலின் தண்டனை கடவுள் வழி
கடவுளை தண்டிக்க என்ன வழி

இரண்டு மனம் வேண்டும்
இறைவனிடம் கேட்பேன்
நினைத்து வாட ஒன்று
மறந்து வாழ ஒன்று
இரண்டு மனம் வேண்டும்

# பஞ்சம் - பசி - பட்டினி

# எங்கே செல்கிறது நாடு?

இலங்கையில் அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலையும் நாளுக்கு நாள் விண்ணைத் தொடும் அளவுக்கு பன்மடங்கு அதிகரித்துள்ளது.

நாட்டில் எரிபொருள், எரிவாயுத் தட்டுப்பாட்டை அடுத்து அனைத்துப் பொருட்களின் விலையும் அதிகரித்திருந்த நிலையில் தற்போது ரணில்-கோட்டா அரசாங்கம் மேற்கொண்ட வற்வரி அதிகரிப்பு மேலும் பொருட்களின் விலையை உயர்த்தியுள்ளது.

சாதாரண பொதுமகன் ஒருவர் உணவு உட்பட தனது அடிப்படைத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அவல நிலைக்கு நாடு தற்போது தள்ளப்பட்டுள்ளது.

ஐ.நாவின் உணவுத் திட்டம் மற்றும் பொருளாதார நிபுணர்களின் கணிப்பின்படி இலங்கையில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளதாக முன்னரே எச்சரித்துள்ளனர்.

பிரதமர் ரணில் கூட இலங்கையில் அரிசியின் கையிருப்புக் குறைந்தளவே இருப்பதாக சொல்லியதோடு எதிர்காலத்தில் இலங்கை வாழ் மக்கள் இரண்டு வேளை உணவை மட்டுமே உண்ண வேண்டிய நிலை ஏற்படலாம் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலைமை இவ்வாறு இருக்க அரிசி ஆலை உரிமையாளர்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அரிசியின் விலையை அதிகரித்ததோடு அரிசிகையிருப்பில்இல்லை என நாளுக்கு நாள் அறிக்கை விடுகின்றனர். நாட்டின் பொருளாதாரம் மற்றும் இன்றைய யதார்த்த நிலையை யாரும் சொல்லி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இல்லை. எரிபொருள், எரிவாயு, மருந்து, உணவு என தட்டுப்பாடு என்ற வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

அதேபோல் பொருட்களின் விலையும் விண்ணைத் தொடும் அளவு உச்சம் பெற்றுள்ளது. மக்கள் தமது அன்றாடத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அவல நிலையில் உள்ளார்கள்.

நாட்டின் ஆட்சியாளர்களோ மக்களைப் பற்றி இம்மியும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க சரியான திட்டமிடல் எதனையும் ரணில்-கோட்டா புதிய அரசு செய்ததாகத் தெரியவில்லை.

நாட்டில் டொலர் கையிருப்பில் இல்லாததால் ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நிலையில் இலங்கை உள்ளது.

எத்தனை நாட்களுக்குத் தான் இந்தியா உட்பட ஏனைய சர்வதேச நாடுகளிடம் கடனைப் பெற்று நாம் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வது.

சரியான திட்டமிடல் இல்லாததால் தொடர்ச்சியான விலையேற்றமும் வரிசையுகமும் தொடந்து கொண்டு தான் இருக்கப் போகிறது.

இரசாயன உர இறக்குமதியை ராஜபக்ஷ அரசாங்கம் தடை செய்ததன் காரணமாக இந்த ஆண்டுக்கான விளைச்சலை நம்மால் எதிர்பார்க்க முடியாது.

வெளிநாடுகளிடம் இருந்து தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசிடம் டொலர் கையிருப்பு இல்லை. இப்படியாக இலங்கையின் கதவுகள் நாலாபுறமும் அடைக்கப்பட்டே கிடக்கின்றன.

அவசியமான நேரத்தில் இந்தியாவின் உதவி, தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் தமிழக மக்களின் நிவாரணப் பொருட்களால் தான் இலங்கை மக்கள் தற்போது மூன்று வேளை சாப்பிடக்கூடிய நிலையில் இருக்கிறது.

இந்தியாவின் உதவி இல்லாமல், இலங்கையால் மூச்சுக் கூட விட முடியாத நிலைக்கு ஆட்சியாளர்கள் நாட்டினை அதலபாதாளத்திற்கு கொண்டு வந்து விட்டு விட்டனர்.

எதிர்வரும் சில மாதங்களில் பஞ்சம், பட்டினிச்சாவு, கொலை, கொள்ளை, வழிப்பறி, கடத்தல் என்ற சொற்களை நாம் அதிகளவில் கேட்கப் போகின்றோமோ என்ற அச்ச நிலை மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் ராஜபக்ஷ என்ற வர்க்கம் முழுமையாக இல்லாமல் போகும் வரை சர்வதேச நாணய நிதியமோ உலக வங்கியோ இலங்கையை இம்மியும் திரும்பிப் பார்க்காது என்பதனை நன்றாக உணரக்கூடியதாக உள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ தனது சிம்மாசனத்தில் இருந்து இறங்குவதாகத் தெரியவில்லை.

மூவின மக்களும் ஒன்றாகச் சேர்ந்து எவ்வளவுதான் ஆர்ப்பாட்டங்கள், கோசங்கள் போட்டாலும் ஜனாதிபதி கோட்டா தனது பதவியை விட்டுக் கொடுக்கத் தயார் இல்லை என்பதே உண்மையானது.

எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பஞ்சம்-பட்டினிச் சாவைத் தடுப்பதற்கு தற்சார்பு பொருளாதாரமே நமக்கு இருக்கும் ஒரே வழி. வீட்டுத் தோட்டம், கால்நடைகள் வளர்ப்பதன் மூலம் எமக்கான தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ளலாம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தடுப்பதற்கு நமக்கு இருக்கக் கூடிய ஒரே வழி இவை மட்டுமே.

**க.மதீசன்**



**எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பஞ்சம் - பட்டினிச் சாவைத் தடுப்பதற்கு தற்சார்பு பொருளாதாரமே நமக்கு இருக்கும் ஒரே வழி. வீட்டுத் தோட்டம், கால்நடைகள் வளர்ப்பதன் மூலம் எமக்கான தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ளலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 கோடியை தொடவுள்ள கமலின் விக்கிரம்

உலகநாயகன் கமல் நடிப்பில் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் சமீபத்தில் வெளியான திரைப்படம் விக்ரம்.

தமிழ் திரையுலகமே பெரிய ளவில் எதிர்பார்த்த விக்ரம் திரைப்படம் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பிளாக் பஸ்டர் வரவேற்பை பெற்று இருக்கிறது.

வரிசையாக முன்னணி நடிகர்களின் திரைப்படங்கள் சொதப்பி வந்த நிலையில் விக்ரம் திரைப் படம் சிறந்த விமர்சனங்களை பெற்று தமிழகத்தை தாண்டியும் வசூலை குவித்து வருகிறது.

இதனிடையே விக்ரம் திரைப் படம் வெளியாகி 7 நாட்களை கடந்துள்ள நிலையில் தற்போது இப்படத்தின் ஒட்டுமொத்த வசூல் குறித்த விவரம் வெளியாகியுள்ளது.

ஆம், அதன்படி இப்படம் உலகளவில் தற்போது வரை ரூ.260 கோடிக்கும் மேல் வசூலை குவித்துள்ளது. வெறும் 7 நாட்களில் இவ்வளவு பெரிய வசூலை குவித்து சாதனை படைத்துள்ள படம் விக்ரம் திரைப்படம் மட்டுமே.

இரண்டாவது வார இறுதியில் விக்ரம் திரைப்படம் ரூ. 300 கோடியை தாண்டி விடும் எனவும் நம்பப்படுகிறது.

# நகைச்சுவை நாயகன்

### வாழ்க்கைச் சுருக்கம்



நாகேஸ்வரன் என்ற இயற் பெயரைக் கொண்ட நாகேஷ் கன்னடப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். தமிழ்நாடு, தாராபுரம் பகுதியில் கன்னட மாதவர்கள் வாழும் கொழிஞ்சிவாடி என்ற ஊரில் பிறந்தார். கிருஷ்ணன் ராவ்-ருக்மணி அம்மாள் ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இவர் தந்தை கிருஷ்ணன் ராவ் கர்நாடகாவில் அரிசிக்கரே என்ற ஊரில் உள்ள இரயில் நிலையத்தில் அதிகாரியாக பணியாற்றிவந்தார். நாகேஷ் அவர்களை சிறுவயதில் வீட்டில் குண்டப்பா என்றும் நண்பர்களால் குண்டுராவ் என்றும் கிண்டலாக அழைக்கப்பட்டார்.

தாராபுரத்தில் தனது பத்தாம் வகுப்பு படிப்பை முடித்துக் கொண்டு கோவை பி. எஸ். ஜி கலைக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். இவர் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது அம்மை நோய் வந்ததால் அவரது முகத்தில் தழும்புகள் உண்டானது. பின்பு நாகேஷ் கோவையில் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, தனது தந்தை பணியாற்றிய இரயில்வே இலாக்காவில் திருப்பூர் இரயில் நிலையத்தில் எழுத்தாளராகப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்ததால் சிறிது காலம் திரைக்கு செல்லும் காலம் வரை அங்கு பணியாற்றிவந்தார். புது வசந்தம், சேரன் பாண்டியன் உள ளிட்ட படங்களில் நடித்த ஆனந்த் பாபு இவரது மகனாவார்.

### நடிப்புத் துறையில்

சிறுவயதில் இருந்தே நடிப்பின் மீது பற்றுக் கொண்ட நாகேஷ் அமெச்சூர் நாடகங்களில் நடித்து வந்தார். மணியன் எழுதிய "டாக்டர் நிர்மலா" நாடகத்தில், "தை தண்டபாணி" என்ற பாத்திரத்தில் "தை, தை" என்று நோயாளியாய் மேடையில் குதித்ததால், "தை நாகேஷ்" என்றும் பின்னர் ஆங்கிலத்தில் வாயை என்பதை "தாய்" என்று மாற்றி படித்ததால், இவர் "தாய் நாகேஷ்" என அழைக்கப்பட்டார்.

1959 ஆம் ஆண்டில் திரைப்படத் துறையில் புகுந்தார். தாமரைக்குளம் என்ற திரைப்படத்தில் முதன் முதலாக நடித்தார். அதன்பின்னர் சில படங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீதரின் காதலிக்க நேரமில்லை திரைப்படத்தில் முக்கிய நகைச்சுவைப் பாத்திரத்தில் தோன்றினார். இவருடன் பல படங்களில் ஜோடியாக நடித்தவர் மனோரமா ஆவார். கே. பாலசந்தர் கதை, வசனம் எழுதிய சர்வர் சுந்தரம் திரைப்படத்தில் மிகச் சிறப்பாக நடித்து குணச்சித்திர நடிப்பிலும் நாகேஷ் சிறந்து விளங்கினார்.

திருவிளையாடல் படத்தில் தருமி என்ற கதாபாத்திரம், தில்லானா மோகனாம்பாள் படத்தில் வைத்தி என்ற பாத்திரம் பலராலும் பாராட்டப்பட்டது. எம். ஜி. ஆர், சிவாஜி கணேசன் போன்றோருடன் பல படங்களில் நகைச்சுவை கதாபாத்திரத்தில் இவர் நடித்துள்ளார்.


# விக்ரம் வெற்றிக் கொண்டாட்டம் பரிசை அள்ளி கொடுக்கும் கமல்

விக்ரம் திரைப் படத்தில் நடித்த நடிகர் சூர்யாவிற்கு ரோலக்ஸ் கைக்கடி காரத்தை பரிசளித்த கமல் ஹாசன்.

விக்ரம் திரைப் படத்தில் ரோலக்ஸ் என்னும் கதாப் பாத்திரத்தில் நடித்த நடிகர் சூர்யாவிற்கு, ரோலக்ஸ் கைக்கடி காரத்தை கமல்ஹாசன் பரிசளித்தார்.

திரைப்படத்தின் வெற்றியை கொண்டாடும் வகையில் கமல்ஹாசன், இயக்குநர் லோகேஷ் கனகராஜுக்கு Lexus காரையும், உதவி இயக்குநர்கள் 13 பேருக்கு TVS Apache RTR 160 இரு சக்கர வாகனத்தையும் பரிசளித்தார்.

படத்தின் கிளை



மேக்ஸில் 3 நிமிட காட்சியில் சிறப்பு தோற்றத்தில் நடித்து ரசிகர்களை திகைக்க வைத்த சூர்யாவுக்கு கமல்ஹாசன் ரோலக்ஸ் கைக்கடிகாரத்தை பரிசளித்த நிலையில், அந்த புகைப்படத்தை டுவிட்டரில் பகிர்ந்து சூர்யா நன்றி தெரிவித்துள்ளார்.

# நயனை கரம் பிடித்த விக்கி



சென்னை அடுத்த மாமல்லபுரத்தில் நடிகை நயன்தாரா - இயக்குநர் விக்னேஷ் சிவன் திருமணம் திரைப்பிரபலங்கள் முன்னிலையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

கடந்த 6 ஆண்டுகளாக காதலித்து வந்த இருவரும் இன்று திருமண பந்தத்தில் இணைந்தனர். மாமல்லபுரத்தை அடுத்த வடநெம்மேலி பகுதியில் உள்ள "ஷெரட்டன் கிராண்ட் " எனும் கடற்கரை நட்சத்திர விடுதியில் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு இடையே நயன்தாரா-விக்னேஷ் சிவன் திருமணம் நடைபெற்றது.


15 க்கும் மேற்பட்ட புரோகிதர்கள் வேத மந்திரங்கள் முழங்க இந்து முறைப்படி நயன்தாரா-விக்னேஷ் சிவன் திருமணம் செய்து கொண்டனர்.

இவர்களது திருமணத்திற்கு, நடிகர் ரஜினிகாந்த், பாலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான், விஜய்சேதுபதி, சூர்யா, ஜோதிகா, கார்த்தி, எஸ். ஜே.சூர்யா, விக்ரம் பிரபு, ஜெயம் ரவி ஆகியோர் வருகை புரிந்து, மணமக்களை வாழ்த்தினர்.

கிருத்திகா உதயநிதி ஸ்டாலின், நட்சத்திர தம்பதிகள் மணிரத்னம்-சுஹாசினி, சரத்குமார்- ராதிகா, இயக்குநர்கள் கே.எஸ்.ரவிக்குமார், கௌதம் வாசுதேவ் மேனன், அட்லி, சிறுத்தை சிவா, ஹரி தயாரிப்பாளர் போனி கபூர் உள ளிட்ட ஏராளமான திரைப்பிரபலங்கள், நயன்தாரா-விக்னேஷ்சிவன் திருமண விழாவில் பங்கேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தின் அதிசயங்கள் - பகுதி 1



தமிழகத்தின் இயற்கை அமைப்பும், தட்ப வெப்பமும் சமச்சீரான தன்மை கொண்டவை. கலைகளிலும் பண்பாட்டிலும் தனித்துவமிக்க தமிழகத்தின் அதிசயங்கள் இன்னமும் மிகச்சரியாக வரையறுக்கப்படவில்லை. சில ஊடகங்கள், சுற்றுலா நிறுவனங்கள் தமிழகத்தில் பார்க்க வேண்டிய இடங்கள் குறித்து தங்கள் கண்ணோட்டத்தில் சிலவற்றை சுட்டிக்காட்டியுள்ளன. என்றாலும் சரித்திரப் பின்புலம் மற்றும் கலைத் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பட்டியல் உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.

அப்படியான அம்சங்கள் சிலவற்றைப் பற்றி மட்டும் இங்கு காண்போம்.

**தஞ்சை பெரிய கோவில்**

10 ஆம் நூற்றாண்டில் ராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டது. அவரது காலத்தில் ராஜராஜேஸ்வரம் என்றும், மராட்டியர்கள் காலத்தில் பிரகதீஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டது. ஏழு ஆண்டுகள் காலத் தொடர்ச்சியான உழைப்பில் உருவாக்கப்பட்ட இந்த ஆலயம் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் தமிழர்களின் கலைத் திறன், தொழில்நுட்ப அறிவு ஆகிய வற்றைப் பறை சாற்றிக் கொண்டு இருக்கிறது.

சுற்றிலும் மலைகளோ, பாறைகளோ காணப்படாத தஞ்சையில் 60 மீற்றர் உயரத்தில் இந்த கற்கோவிலை உருவாக்கியது மாபெரும் சாதனையே. சுமார் 14 மீற்றர் உயரமும் 3 மீற்றர் அகலமும் 7 மீற்றர் நீளமும் உடைய இங்குள்ள நந்தி ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. குஞ்சரமல்ல ராஜ ராஜ பெருந்தச்சன் என்கிற சிற்பியின் தலைமையின் கீழ் இதன் கட்டுமானப் பணிகள் நடைபெற்றன. யுனெஸ்கோ நிறுவனம் இக்கோவிலை உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்துள்ளது.

**மாமல்லபுரம்**

காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள மாமல்லபுரம் பல்லவர்கள் காலத்தில் (ஏழாம் நூற்றாண்டு) அவர்களின் முக்கியத் துறைமுகமாக இருந்திருக்கிறது.

கடற்கரையை ஒட்டிய கோவில்களில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் பல்லவர் பாணிக் கலைத்திறனுக்குச் சான்றாக விளங்குபவை. சிற்ப வேலைகள் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் துவங்கப்பட்டன. கோவில்கள், ரதங்கள் ஆகியன இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தில் உருவாக்கப்பட்டன. பஞ்ச பாண்டவ ரதம் எனப்படும் ஐந்து ரதங்கள் தெற்கிலிருந்து வடக்காக சரிந்து சிறுகுன்று ஒன்றில் செதுக்கப்பட்டவை.

30 மீற்றர் உயரமும் 60 மீற்றர் அகலமும் கொண்ட அர்ச்சுனன் தபசு என்கிற புடைப்புச் சிற்பத்தில் மனிதர்கள், விலங்குகளின் பல்வேறு நிலைகள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

யானைகள் நீர் அருந்துவது போலவும், குரங்குகள் அமர்ந்திருப்பது போலவும், மான்கள் தங்களையே முகர்வது போலவும் தத்ரூபமாக வடித்துள்ளனர். (தொடரும்...)




**சரண்**

கணவன்: என்னடி குழம்பு ஒரே இனிப்பா இருக்கு..



மனைவி: அதுவாங்க தக்காளிய விட அப்பிள் விலை கம்பியா இருந்திச்சி அதான் அப்பிள் சாம்பார் வைச்சிட்டேன்

**சசி**

ஒரு துறவியிடம் கேட்கப்பட்டது "கோபம் என்றால் என்ன?" அவர் ஒரு அழகான பதிலைக் கொடுத்தார்.



"பிறர் செய்த தவறுக்கு நமக்கு நாமே கொடுக்கும் தண்டனை."

**குருபரன்**

நீ குரங்கு சாப்பிடு, நான் யானையை சாப்பிடுறேன் இப்படி சொல்லிகிட்டே...



இந்த பிஸ்கெட்ல இருக்கிற கை, கால், வால் எல்லாம் தனி தனியா கடிச்சி சாப்பிட சுகம் இருக்கே..


**பிரக்கியா**

நம் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ளும் போது மனவலிமையும் நம்பிக்கையும் இன்னும் அதிகரிக்கிறது.



**தரண்**

கூட்டி கழிச்சு பாத்தா மொத்த வாழ்க்கையும் மூனு வேளை சாப்பாட்டுக்கு தான்.



**மதி**



இல்லாத ஒன்றின் அருமை இழந்தவர்களுக்கு மட்டுமே புரியும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

294

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## கேள்வி பதில் ....

**உயர்குருதி அழுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் எதிர்காலத்தில் அதனை நிறுத்திக்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா?**

ஆம்: நிறுத்திக்கொள்வதற்கா ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. உதாரணமாக அதிகரித்த உடல் நிறை உடையவர்கள் நிறை குறைப்பு செய்யும் பொழுது இது சாத்திய மாகின்றது. சில சிறுநீரக நோய் நிலைகள் கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுதும் இது சாத்தியமாகின்றது.பிரசவகாலத்தில் தற்காலிக உயர்குருதி அமுக்கநிலை ஏற்படுபவர்களுக்கு பிரசவத்தின் பின்னர் இதற்கான மருந்துகளை நிறுத்தக்கூடியதாக இருக்கிறது.

உயர்குருதி அமுக்க நிலை உள்ளவர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி ஒழுங்கான உடற்பயிற்சி, உணவு முறைகளில் மாற்றம், மன அமைதி வழிமுறைகள் போன்றவற்றை கடைப்பிடித்து வருவார்களாக இருந்தால் அவர்களின் மருந்துகளின் அளவைக் குறைத்து சில சமயங்களில் நிறுத்திக்கொள்ளக் கூடிய நிலைகளும் ஏற்படலாம்.

சில ஓமோன் சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு அவர்களின் அடிப்படை நோய் நிலை கட்டுப்பாட்டிற்கு வரும் பொழுது அதிகரித்த குருதி அமுக்க நிலையும் தானாக குறைந்து விடும். இவர்களுக்கான மருந்து களையும் நிறுத்திக் கொள்ள முடியும்.

உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் தன்னிச்சையாக தாமாக இதற்கான மருந்துகளை நிறுத்திக் கொள்வதோ மாற்றிக் கொள்வதோ ஆபத்தானது.மருத்துவக் குழுவின் ஆலோசனையுடனேயே இவை செயற்படுத்தப்படவேண்டும்.உயர் குருதி அமுக்கத்திற்கான மாத்திரைகளை பாவிக்க ஆரம்பித்தால் அதனை நிறுத்த முடியாது.

எனவே அதனை பாவிக்காமலே இருந்து விடுவோம் என்று எண்ணிக் கொள்வது ஒரு தவறான ஆபத்தான சிந்தனை ஆகும். ஒருவரின் குருதி அமுக்கம் அதிகரித்துக் காணப்பட்டால் அதனை கட்டுப்படுத்துவதற்கு மாத்திரைகளின் பங்கு மிக முக்கியமானதாகும்.

**நோயற்று வாழ அல்லது நோயுற்றும் சுகமாக வாழ என்ன செய்ய வேண்டும்?**

மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கான அத்திபாரம் அவன்கருப்பையில் இருக்கும்போது இடப்படுகிறது.தாயின் மனமகிழ்ச்சி, போதுமான உடற்பயிற்சி, ஆரோக்கிய உணவுகள் சிசுவின் ஆரம்ப ஆரோக்கிய வளர்ச்சிக்கு அடிநாதமாய் திகழ்கின்றன.



**சத்துமாப்பேணிகளோ விற்றமின்குளிசைகளோ பாவிக்க வேண்டிய உண்மையான சந்தர்ப்பங்கள் எவை?**

எமது சொந்த மண்ணில் உற்பத்தியாகும் ஆரோக்கியமான, இயற்கையான உணவுப்பொருட்களான தீட்டாத அரிசிமா, ஊர்க் கோழிமுட்டை, உடன்பசும்பால், மோர், விளாம்பழம், கொய்யாப் பழம், முருங்கைஇலை, வல்லாரை, தவசி முருங்கை, அகத்திப்பூ, தேசிக் காய், ஒடியல், இராசவள்ளி, இளநீர், இள நீரின்வழுக்கல், நுங்கு போன்ற பல அற்புதமான உணவு வகைகளில் நாம் அக்கறை காட்டாமல் இருந்து வருகிறோம்.இவற்றை ஒழுங்காக பாவித்துவருவோமாக இருந்தால் சத்துமாப்பேணிகளோ விற்றமின் குளிசைகளோ பாவிக்க வேண்டிய தேவை இருக்காது.

உலகம் இயந்திரமயமாகி சுதந்திரங்கள் பறிபோய் பூமிக்காற்றுப் புகையாகி, புழுதி மண்டலமாகி, ஓசோன்படலத்தில் ஓட்டைவிழுந்து, பூமியைக்கதிர் வீச்சுக்கள் தாக்க, இலட்சக் கணக்கான பச்சைமரங்கள் வெட்டிச்சாய்க்கப்பட்டு.பாவப்பட்ட மண் பாலைவனமாகிக்கொண்டிருக்கிறது.

இயற்கையான இனியகனிகளுக்குக்கூட இரசாயனம் தெளிக்கப்பட்டுப் பகட்டான நச்சுக்கனிகள் ஆக்கப்பட பொலித்தீன்கள் எம்மை ஆக்கிரமிக்க மனிதன் நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறான். இந்தச் சவால்களை எதிர்கொள்ள சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வு பரந்துபட்ட அளவில் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தான் ஒரு ஆரோக்கியமானவன், சுகதேகி என்று எண்ணிக் கொள்வது அவனைப் பலநோய் நிலைகளிலிருந்து காக்கும்.

சிறுசிறு உடல்நலக்குறைவுகளும் நோய்நிலைகளும் அவ்வப் பொழுது ஏற்படுவது இயற்கை. அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுத்து தொடர்ந்து நாம் ஆரோக்கியமாக வாழ முடியும் என்ற நம்பிக்கை அனுகூலமாக அமையும்.

கடுமையான நோய்நிலைகளிலே பெரும்பாலானவை மனிதனின் கவனக்குறைவினாலும் போதியளவு மருத்துவ அறிவு இல்லாததனாலுமே ஏற்படுகின்றன. எனவே நாம் மருத்துவம் சம்பந்தமான தகவல்களை அறிவதில் அதிகம் ஆர்வம் காட்டவேண்டும்.

இயந்திர மயமாகி விட்ட இந்த உலகை நாம் புத்திசாதுரியமாக சாதகமாக பயன்படுத்த கற்றுக் கொள்வோம்.விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதன் சராசரியாக வாழும் வயதெல்லை அதிகரித்திருக்கிறது.

கற்கை, கற்பித்தல் செயற்பாடுகளில் புரட்சிகரமாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.தகவல் பரிமாற்றத்தில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சியினால் உலகம் ஒரு குடும்பம் போல நெருங்கிவந்திருக்கின்றது. இந்த நல்ல மாற்றங்களை எமது சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக்கொள்வோம்.

உலகிலே உடற்பருமன் அதிகரிப்பால் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் இறக்கின்றனர்.எனும் அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி இருக்கின்றது. உடல்நிறைபராமரிப்பு உயிர்காக்கும் என்ற தகவல் ஒவ்வொரு வரையும் சென்றடைய வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு rkgejkhd cqfs ;reNjfqfis (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இணைந்து பயிரிடுவோம்; நாட்டை வெற்றியடையச் செய்வோம் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானம்

(கொழும்பு)

பொது நிர்வாகம் மற்றும் விவசாய அமைச்சுக்கள் ஒற்றிணைந்து "இணைந்து பயிரிடுவோம் - நாட்டை வெற்றியடையச் செய்வோம்" தேசிய உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வகி பாகம் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட வீட்டுத்தோட்டம் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்தில் தரமான அரச சேவையை வழங்குதல் மற்றும் ஊழியர்களின் திருப்தியை அதிகரிக்கும் நோக்கில் அரச சேவை தொடர்பில் முறையான ஆய்வை மேற்கொள்ளுமாறு இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாயத்தில் இளைஞர்களுக்கு முன்னுரிமையளித்து அதிக உற்பத்தித்திறனைப் பெற்றுக்கொள்வதற்கும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் திட்டங்களை வகுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். (நி-6)

## போயா தினத்தை முன்னிட்டு மதுபானக் கடைகள் மூடப்படும்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பார்கள் மற்றும் மதுபானக் கடைகளை எதிர்வரும் 14 ஆம் திகதி மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த தினத்தில் பல்பொருள் அங்காடிகளுக்குள் உள்ள மதுபானக் கடைகளையும் மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 போயா தினம் என்பதனால் இறைச்சிக் கடைகள், சூதாட்ட விடுதிகள், இரவு விடுதிகள் போன்றவற்றையும் மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## மோசடியான மதுவரி அதிகாரிகளால் நாளாந்தம் 400 மில்லியன் ரூபா இழப்பு

(கொழும்பு)

கலால் திணைக்களத்தின் சில அதிகாரிகளின் மோசடி நடவடிக்கைகளினால் அரசாங்கத்திற்கு நாளாந்தம் 400 மில்லியன் ரூபா வரி வருமானம் இழப்பு ஏற்படுவதாக இலங்கை மதுபான விநியோகஸ்த்தர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கண்டியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அந்த சங்கத்தின் ஊடக பேச்சாளர் கே.டி.பி பெர்னாண்டோ இதனை தெரிவித்துள்ளார். (நி-6)

## இரு வாரங்களுக்குள் ஐந்து எரிபொருள் கப்பல்கள்
# அமைச்சர் காஞ்சன நம்பிக்கை

(கொழும்பு)

அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்குள் ஐந்து எரிபொருள் கப்பல்கள் இலங்கையை வந்தடையும் என்று எரிபொருள் அமைச்சர் காஞ்சன விஜேசேகர நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று தொடக்கம் 22ஆம் திகதி வரையான 12 நாட்களுக்குள் குறித்த ஐந்து கப்பல்களையும் வரவழைக்க எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு இலங்கையில் டீசல் தேவை ஐயாயிரம் மெற்றிக் தொன்னாக இருக்கின்றது. கடந்த நாட்களில் 2800 - 3000 மெற்றிக் தொன் வரையில் நாளாந்தம் டீசல் வழங்கப்பட்டது.

நாளாந்த பெற்றோல் தேவை 3500 மெற்றிக் தொன்னாகும். கடந்த நாட்களில் நாளொன்றுக்கு 2500 மெற்றிக் தொன் வரையான பெற்றோலை நாடு முழுவதும் விநியோகித்துள்ளோம்.

அதேநேரம் மண்ணெண்ணெய்யை மட்டும் தெரிவு செய்யப்பட்ட மீனவ மற்றும் கமத்தொழில் செய்கை பிரதேசங்களுக்கு விநியோகித்துள்ளோம் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (நி-6)


### ஜெயக்குமார் திருமண சேவை

சூரியன் செவ் உடைய மணமகளுக்கு லண்டன் 1991 பல்கலைக் கழகம் படித்த மணமகன் தேவை. சீதனம் உண்டு.

தொடர்புகளுக்கு-

0094764752219 viber

German 004917643399372.

WhatsApp (1813)

### பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள இல்லமொன்றிற்கு வீடு சுத்தம் செய்தல், மற்றும் குழந்தை பராமரிக்கத் தெரிந்த பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இன்று (12.06.2022)
மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணிக்குள்
கீழ்க்காணும் முகவரிக்கு சமுகம் தரவும்.

**இல.81 பிறவுண் வீதி கொக்குவில், யாழ்ப்பாணம்.** (சி-4482)

**தொடர்புகளுக்கு:- 077 736 8745**

### சொர்க்கம் திருமண சேவை

1989 ல் பிறந்த MBA படித்த சதய நட்சத்திர செவ்வாய்க்குற்றம் உள்ள கனடா மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

34 வயதுடைய சிங்கப்பூரில் வேலை பார்க்கும் திருவாதிரை நட்சத்திரத்தில் செவ்வாய்க் குற்றம் அற்ற மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

1993 ல் பிறந்த மகம் நட்சத்திர (BA) தனியார் துறையில் வேலை பார்க்கும் மணமகனுக்கு உள்ளூர் மணமகள் தேவை.

தொடர்பு கொள்ள- 0014166661855, 077 887 6969 (1819)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>கி.பா:24 ½ சூரி 9 செவ் 10<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:Bsc Health Promotion Master நிர்வாக சேவை பணிப்பாளர் சுகாதார அமைச்சு<br>எதிர்பார்ப்பு:விரிவுரையாளர் வைத்தியர்<br>தொ.இ: B/12701 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா:41 சூரி 8 செவ் 6<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12705 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 1<br>கி.பா:சூரி 9 செவ் 10<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: சாரதி யாழ்.பல்கலைக்கழகம்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில் உள்நாடுமட்டும்<br>தொ.இ: B/12702 | பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: சூரி 4 செவ் 12 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்:Bio medicine quality control<br>எதிர்பார்ப்பு:தகுந்த வரன் லண்டன் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/12706 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் : உத்தராடம் 2<br>கி.பா: சூரி 5 செவ் 1 இல்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்:A/L பிரான்ஸ் இந்தியா தான் வரமுடியும்<br>எதிர்பார்ப்பு : படித்த பெண்<br>தொ.இ: B/12703 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 39 சூரி 9 செவ் 6 இல்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்:Bsc Audit (தனியார்)<br>எதிர்பார்ப்பு:படித்த மணமகன்<br>தொ.இ:G/12707 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம் : அத்தம் 2<br>கி.பா:சூரி 4செவ் 3 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி (அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/12704 | பிறப்பு: 1996 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்:திருவோணம் 3<br>கி.பா: சூரி.செவ் 11<br>உயரம் :-5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12709 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# CONSULATE GENERAL OF INDIA JAFFNA

இந்திய தூதரகம், யாழ்ப்பாணம், மருதடி வீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்திற்கு துப்புரவு சேவைகளை வழங்குவதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட, புகழ்பெற்ற மற்றும் அனுபவமுள்ள துப்புரவு சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. மேலதிக விபரங்களை பின்வரும் இணையத் தளங்களில் இருந்து பெறலாம்:

https://cgijaffna.gov.in
https://eprocure.gov.in/epublish/app

ஏலங்களை 30 ஜூன் 2022 வரை 15.00 மணிநேரத்திற்குள் சமர்ப்பிக்கலாம். எந்த விளக்கத்திற்கும் hoc.jaffna@mea.gov.in க்கு எழுதவும் அல்லது 021 222 0505 என்ற எண்ணிற்கு அழைக்கவும். (C-4472)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

# யாழ்ப்பாணம் உட்பட 8 மாவட்டங்கள்

# அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம்

(கொழும்பு)

**நாட்டில் இம்மாதம் ஜூன் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை 2,416 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**



மேல் மாகாணத்தில் டெங்கு வேமாக பரவி வரும் நிலையில் 8 மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளத் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உரிமைகோரப்படாத

## 24 ஆயிரம் கிலோ அப்பிள் தொகை மிருகக்காட்சிசாலைக்கு வழங்கி வைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 24,000 கிலோ கிராம் அப்பிள் தொகையை உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ளாமை காரணமாக அதனை கொழும்பு தெஹிவளை மிருக காட்சி சாலைக்கு கையளிக்கப்பட்டது.

கொழும்பு சர்வதேச துறைமுகத்தின் சி.அய்.சி.டி பகுதிக்கு கடந்த பெப்ரவரி மாதம் சீனாவில் இருந்து குறித்த அப்பிள் கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த அப்பிள் கொள்கலன்களை அதனை இறக்குமதி செய்தவர்கள் இதுவரையில் கொண்டு செல்லாமல் இருப்பது தொடர்பாக துறைமுக அபிவிருத்தி விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிற்கு வழங்கப்பட்ட தகவல் ஒன்றை அடுத்து குறித்த சி.அய்.சி.டி நிறுவனத்திடம் நடத்திய பேச்சுவார்த்தையினை தொடர்ந்தே இவற்றை மிருககாட்சிசாலைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த குறித்த கொள்கலன்களில் 24000 கிலோக் கிராம் எடை கொண்ட அதாவது சுமார் ஒரு இலட்சம் அப்பிள் காய்கள் இருப்பதாக சி.அய்.சி.டி நிறுவனத்தின் பிரதானி ஜெக் உவாங் தெரிவித்தார். (நி-6)

## பதுக்கிய அரிசி மூடைகள்

## கட்டுப்பாட்டு விலையில் பொதுமக்களுக்கு வழங்கி வைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பதுக்கல் தொடர்பான புலனாய்வு நடவடிக்கையின் போது மட்டக்களப்பில் அரிசியினை பதுக்கி வைத்திருந்த வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனை நுகர்வோர் அலுவல்கள் சுகாதார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி வரும் இச்சூழலில் காத்தான்குடி பிரதேசத்தில் இரண்டு வியாபார நிலையங்கள் உட்பட வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3500 அரிசி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இனங்காணப்பட்ட அரிசி மூடைகளை உரிமையாளர்களின் விருப்பத்தின் பெயரில் பொதுமக்களுக்காக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு சோற்று அரிசியினை 220 ரூபாவிற்கும் சம்பா அரிசியினை 230 ரூபாவிற்கும் கிரிசம்பா அரிசியினை 260 ரூபாவிற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உணவுப் பாதுகாப்பிற்கு முதலிடம்

## விதுர வித்கிரமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் உணவுப் பாதுகாப்பிற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், நாட்டிலே அல்லது உலகிலோ அனைத்து அம்சங்களும் உணவுப் பாதுகாப்பில் தங்கியுள்ளன என சுட்டிக்காட்டினார்.

90 களில் தொழில்மயமாக்கலை நோக்கி நகர்த்த முயற்சிகள் மூலம் உருவாக்கப்பட்ட திறந்த சந்தைக் கொள்கை காரணமாக உள்ளூர் விவசாயம் தோல்வியடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பஞ்சம் வரவுள்ளதாக உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது என்றும் இது முழு உலகத்தையும் பாதிக்கும் என்றும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டார்.

விவசாயத்தில் தன்னிறைவு அடையத் தவறினால், உணவுப் பொருட்களைத் தொடர்ந்து கடனாகப் பெற முடியாத அவல நிலை ஏற்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 600 | 550 |
| தக்காளி | 800 | 700 | 750 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 140 | 150 |
| கோவா | 380 | 320 | 320 | 400 |
| கரட் | 200 | 350 | 380 | 400 |
| பூசணி | 120 | 180 | 120 | 160 |
| புடோல் | 260 | 200 | 220 | 320 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 480 | 350 | 300-600 | 480 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 600 | 700 | 650 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 160 | 350 |
| கருணைக் கிழங்கு | 240 | 240 | 150 | 220 |
| பயற்றங்காய் | 300 | 500 | 300 | 400 |
| லீக்ஸ் | 200 | 220 | 280 | 300 |
| பீற்றூட் | 380 | 300 | 280 | 400 |
| கறிமிளகாய் | 450 | 500 | 180 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 1100 | 800 | 1600 |
| போஞ்சி | 800 | 700 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 100 | 100 |
| தேசிக்காய் | 600 | 500 | 550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 650 | 500 | -- | 600 |
| முள்ளங்கி | 70 | 200 | -- | 300 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | --- | 150 | -- | 180 |

## சுற்றுலாத்துறையை கவரும் திட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள்

## ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலான புதிய அணுகுமுறைகளைக் கண்டறிய வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சுற்றுலாத்துறை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொரோனா தொற்றுநோயால் முடங்கியிருந்த சுற்றுலாத் துறை, மீட்சியடைந்தாலும் நெருக்கடியில் தள்ளாடிக்கொண்டிருப்பதாக தெரிவித்தார். தேசிய பொருளாதாரம் மற்றும் பெருமளவிலான வேலை வாய்ப்பை பாதிக்கும் ஒரு முக்கியமான துறையாக இருப்பதால், அதை விரைவாக அபிவிருத்தி செய்ய வேண்டும். அத்தோடு வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் கொண்டிருக்கும் நாட்டைப் பற்றிய தவறான தகவல்களை திருத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். மேலும் சுற்றுலாத்துறையில் ஈடுபடும் மக்கள் எதிர்நோக்கும் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதிலிருந்து தான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
> – காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## படையினர் வசமுள்ள காணிகளை உடனடியாக விடுவியுங்கள்

நாடு இத்துணை தூரம் பொருளாதார நெருக்கடியைச் சந்திப்பதற்கு மூலகாரணம் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய கொடும் போராகும்.

இந்த உண்மை பல தடவைகள் பலராலும் கூறப்பட்டபோதிலும் அதனை ஏற்றுக் கொள்வது பேரினவாதிகளால் முடியவில்லை.

எனினும் இப்போது நாடு அனுபவிக்கின்ற பொருளாதார நெருக்கடி அவர்களுக்கு உண்மையை உணர்த்தியுள்ளது.

அதிலும் ஆச்சரியம் என்னவெனில் பேரினவாதத் தீயை நூரவிடாமல் அதற்கு எண்ணெய் ஊற்றிய சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் கூட இப்போது உண்மையை உணர்ந்து கருத்துரைக்கத் தலைப்பட்டுள்ளனர்.

ஆம், தமிழ் மக்களைப் புறந்தள்ளியதாலேயே நாடு படுகுழியில் வீழ்ந்துள்ளதென சம்பிக்க ரணவக்க திருவாய் மலர்ந்துள்ளார்.

பரவாயில்லை, சம்பிக்க ரணவக்க உணர்ந்த உண்மையை இன்னமும் உணராத சிங்கள அரசியல்வாதிகள் இருக்கின்றனர் எனும் போது உண்மையை உரைத்த சம்பிக்க ரணவக்கவைப் பாராட்டுவது பொருத்துடையதே.

ஆக, பொருளாதார நெருக்கடியால் நாடு சீரழிந்து சின்னாபின்னப்படப் போகின்ற இந்த நேரத்தில், இனவாதம், மதவாதம் துறந்து அனைவரும் இலங்கையர்களாகச் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் இந்த நாடு இருக்கிறது.

உண்மை, இந்த நாட்டின் மூத்த குடிகளாகிய தமிழ் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக்கி அவர்கள் மீது போர்தொடுத்து இன அழிப்புச் செய்த சிங்களப் பேரினவாதிகள்; பஞ்சத்தால் நாடு அழியப்போவதை உணராமல் இருப்பதுதான் வேடிக்கைக்குரியது.

அதிலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்குவதில் – தமிழ் இனத்தை அழிப்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் காட்டிய பேரினவாதக் கோலத்தை இப்போது காட்டாமல் அடங்கியிருப்பதும் விசித்திரமே.

எது எவ்வாறாயினும் இன்றைய சூழ்நிலையில் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய இராணுவ முகாம்களை கணிசமாகக் குறைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேவை ஏற்பட்டுள்ள இச்சூழமைவில் தமிழர் தேசத்தில் இராணுவம் அபகரித்த நிலங்களை தமிழ் மக்களிடம் உடனடியாகக் கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் கூட்டாக முன்வைக்க வேண்டும்.

ஆம், இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நம் நிலங்கள் விவசாயச் செய்கைக்கு மிக உகந்த நிலங்களாகும்.

எனவே இந்த நேரத்தில் அந்த நிலங்களை மக்களிடம் மீளக் கையளிப்பதன் மூலம் விவசாயச் செய்கையை ஊக்குவிக்க முடியும்.

தவிர, படையினரின் வசமுள்ள விளை நிலங்களை உரியவர்களிடம் உடனடியாக ஒப்படையுங்கள் என்று இந்த நேரத்தில் நாம் முன்வைக்கின்ற கோரிக்கையில் இருக்கக்கூடிய நியாயத்தை சிங்கள மக்கள் மட்டுமன்றி உலக நாடுகளும் ஏற்றுக் கொள்ளும்.

ஆகையால், மேற்படி காணி விடுவிப்பில் தமிழ்த் தரப்புகள் தீவிர முயற்சி செய்தால் அதில் நிச்சயம் வெற்றியடைய முடியும்.

## டொலர்கள் செலுத்தாததால் 4 ஆவது நாளாக நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள எரிவாயு கப்பல்

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ள 3,900 மெற்றிக் தொன் எரிவாயு கப்பலில் இருந்து 4 ஆவது நாளாகவும் எரிவாயுவை தரையிறக்க முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2.5 மில்லியன் டொலர்களை செலுத்த முடியாத காரணத்தினால் இவ்வாறு தரையிறக்க முடியாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, லிட்ரோ நிறுவனத்தின் எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டு நேற்றுடன் 4 நாட்கள் நிறைவடைந்துள்ளன.

இதனால், பொதுமக்கள் எரிவாயு வரிசையில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.(ம)

## பாவனையாளர்கள் எரிபொருள் அளவை அறிய விசேட இணையம் அறிமுகம்

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள், எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கையிருப்பில் உள்ள எரிபொருள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனமும் (ICTA) இணைந்து இணையத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

www.fuel.gov.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பொதுமக்கள் தங்களது மாகாண, மாவட்ட மற்றும் நகரங்களின் விபரங்களை உள்ளீடு செய்து குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மதுவை அருந்தக் கொடுத்துவிட்டு 15 பவுண் நகை திருட்டு

### முகநூல் மூலம் அறிமுகமான பெண்ணால் விபரீதம்

ஒருவருக்கு மதுபானத்தை அருந்தக் கொடுத்து தங்க நகைகளை திருடிச் சென்ற பெண் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முகநூல் மூலம் நண்பர்களாகிய இருவரும் திஸ்ஸமஹாராமையிலுள்ள விடுதி ஒன்றுக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளனர்.

இதன்போது, மதுபானத்தை அருந்தக்கொடுத்து 15 பவுண் நிறையுடைய தங்க நகைகளை எடுத்துக்கொண்டு குறித்த பெண் தப்பிச் சென்றுள்ளார்.

அந்நபர் சென்ற காரையும் எடுத்துச்சென்றுள்ளதுடன் அதனை திஸ்ஸவாவிக்கு அருகில் நிறுத்தி விட்டு அந்த பெண் தப்பிச்சென்றுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவரே இதனை செய்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

கொரியாவிற்கு தொழிலுக்கு சென்று கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் நாடு திரும்பிய ஒருவரிடமே தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன. (ம)

## எதிர்வரும் வாரத்திற்கான மின்வெட்டு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையில் சுழற்சி முறையில் மின்சாரத்தை துண்டிப்பது தொடர்பில், மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, 13,15, 16,17,18 ஆகிய தினங்களில் A,B,C,D,E,F,G, H,I,J,K,L,P,Q,R,S,T,U, V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் 2 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், 14 மற்றும் 19ஆம் திகதிகளில் A,B, C,D,E,F,G,H,I,J,K,L,P, Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் ஒரு மணித்தியாலமும் மின்துண்டிப்பை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## மன்னாரில் இருவர் கொலை 16 சந்தேகநபர்கள் தலைமறைவு

மன்னார்- நொச்சிக்குளம் பகுதியில் சகோதரர்கள் இருவர் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 16 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும், சந்தேக நபர்கள் அனைவரும் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கொலை செய்யப்பட்ட இருவரின் சடலங்கள் நேற்று சனிக்கிழமை காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறு வலுப்பெற்றதையடுத்து, நேற்று முன்தினம் காலை கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ம-285)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

### தவறு செய்பவர்களை திருத்த வேதம் கூறும் வழி...



இப்படிப்பட்ட கணவனைத் திருத்த மனைவி கையாளும் முறையில் தான் தோல்வி ஏற்படுகிறது. சண்டை போடுவது, கணவனைப் பற்றி பிறரிடம் குறை கூறுவது, கோபம் கொண்டு வீட்டை விட்டு வெளியே செல்வது, விவாகரத்துப் போன்ற செயற்பாடுகளால் குடும்பத்தில் விரிசல் தான் ஏற்படும். கணவனின் குடி, விபச்சாரம் போன்றவற்றை எதிர்த்தாலும் அவனிடம் உள்ள இலஞ்சம் , பொருளாசை போன்ற குணங்களை பெரும்பாலான பெண்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இது கணவனை மேலும் உற்சாகமடையச் செய்து மீண்டும் மீண்டும் தவறுகளைச் செய்ய வைக்கிறது.

கணவன் வாங்கி வரும் இலஞ்சப் பணம், பொருட்கள் அல்லது கணவனை தேடிவரும் இதுபோன்ற வஸ்துக்களை எந்த மனைவியாவது வெறுக்கிறாளா? அல்லது அதை விரும்பி ஏற்கிறாளா? இதில் தான் மனைவியின் கற்புள்ள நடத்தையைக் காண முடியும். இப்படிப்பட்ட பணமும், அதனால் ஏற்படும் சாபங்களும் வீட்டுக்குள் வர வேண்டாம் என்று ஓரிரு முறை கணவனிடம் பணிவாகக் கூறி எச்சரிக்கலாம். இலஞ்சப் பொருட்களைப்புறக்கணிக்கலாம். அப்படியும் திருந்தாத பட்சத்தில், அதை இயேசுவிடம் வைத்து தொடர்ந்து பொறுமையோடு ஜெபிக்கலாம்.

இதைக்காண்கின்ற கணவன், நிச்சயமாக மனைவியின் இந்த கற்புள்ள நடத்தையால் தொடப்பட்டு மனம் திருந்த வாய்ப்பு உண்டாகும். அவனை பேசித் திருத்த வேண்டாம். ஏனென்றால் இந்த நடத்தையை அவன் பார்ப்பதால் போதனையில்லாமலேயே கணவன் திருந்துவான் (1 பேதுரு 3:1,2). அதை இயேசு நிச்சயம் செய்வார். இதற்கு பொறுமை தேவை. பக்தியுள்ள பெண்களுக்கு நிச்சயம் அதை இறைவன் தருவார். மனைவியிடம் கெட்ட குணங்கள் காணப்படும் பட்சத்தில், கணவன் தனது கற்புள்ள நடத்தையின் மூலம் அவளை திருத்த வேண்டும். 2 பேருக்குமே கற்புள்ள நடத்தை இல்லை என்றால் , குடும்ப சமாதானம் கேள்விக்குறியாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துத் தட்டுப்பாடுகள் அதி உச்சத்தில்

# வன்முறைகள், விபத்துக்களை தவிருங்கள்

## மன்னார் சுகாதார பணிப்பாளர் வேண்டுகோள்



(மன்னார்)

**நாட்டில் மருந்து தட்டுப்பாட்டு உள்ளமையால் தேவையில்லாமல் வாள்வெட்டு சம்பவங்கள், வீதி விபத்தில் காயமடைதல், குளங்களில் நீந்தி மூழ்குதல் போன்ற அவசியமற்ற விடயங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவையில்லாமல் வாள்வெட்டு சம்பவங்கள், வீதி விபத்தில் காயமடைதல், குளங்களில் நீந்தி மூழ்குதல் போன்ற அவசியமற்ற விடயங்களில் பாதிக்கப்பட்டு வருபவர்களுக்கு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளும் போது உண்மையான தேவையுடைய நோயாளிகளுக்கு மருத்துவச் சேவை செய்ய முடியாமல் போகிறது.

அத்துடன் எரிபொருள் இல்லாத காரணத்தால் மன் னார் மாவட்டத்தில் 5 அம்புலன்ஸ்க்கு மேல் இயங்காமல் இருக்கிறது. வீதி விபத்துக்கள், வாள்வெட்டு காயங்கள் போன்ற பலவிதமான அவசர மருத்துவ சேவைக்கு வருபவர்கள் காத்திருக்க வேண்டியுள்ளதுடன் உயிரிழப்புகள் ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது.

எனவே தற்போதைய நாட்டினதும் ஒவ்வொரு குடும்பத்தின் நெருக்கடியான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு களியாட்டங்கள் வாள்வெட்டு சம்பவங்கள், வீதி விபத்துக்கள் போன்ற ம்னித குலத்திற்கு தேவையில்லாத செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (4-6-285)

### கிளி/கிருஷ்ணர் ஆலய மஹோற்சவம்

(கண்டவளை)

கிளிநொச்சி அருள்மிகு கிருஷ்ணர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பத்து நாட்கள் நடைபெறவுள்ள இவ் மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 20 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

# வெளிப்படைத் தன்மையுடனேயே உரம் பரந்தனிற்கு கொண்டு செல்லப்பட்டது

## மாவட்ட கமநல திணைக்களம் விளக்கம்

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்தில் இருந்து பரந்தன் கமநல சேவை நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ள 1500 கிலோ யூரியா, தேவைப்பாடுடைய ஏனைய விவசாயிகளுக்கு வழங்குவதற்காகவே வெளிப்படைத் தன்மையுடன் கொண்டு செல்லப்பட்டது என மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தேவரதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்தில் இருந்த 1500 கிலோ யூரியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளரால் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவித்து அக்கராயன் குளம் பிரதேச விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த கமநல சேவை நிலையத்தில் மேலதிகமாக இருந்த யூரியா 1500 கிலோ ஏனைய மேட்டு நில விவசாயிகளுக்கு வழங்குவதற்கு பிரதி ஆணையாளர் என்ற வகையில் வெளிப்படைத் தன்மையுடன் பரந்தன் கமநல சேவை நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

விவசாய விதை உற்பத்தி திணைக்களம், பல்கலைக் கழகம் விவசாயத் திணைக்களம், மாவட்ட விவசாய கல்லூரி மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய உற்பத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உரத்திற்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இவற்றுக்கான உரத்தினையும் விவசாயிகளுக்கான உரத்தினையும் வழங்க வேண்டிய தேவையுள்ளது.

அதற்காகவே குறித்த 1500 கிலோ உரம் வெளிப்படைத்தன்மையுடன்பரந்தன்கமநலசேவை நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருப்பதாகவும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.(4-6-315)

# மடு திருத்தல ஆடி மாத திருவிழாவிற்கான கலந்துரையாடல்



(மன்னார்)

ஜூலை 2 ஆம் திகதி நடைபெறவுள்ள மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவிற்கான முன் ஆயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

இம்முறை ஆடி திருவிழாவிற்கு சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர், மின்சாரம், பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இம்முறை மடுத்திருத்தல பகுதிகளில் அதிக எண்ணிக்கையான உணவகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நியாயமான விலையிலும், சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக உணவுப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் அறிக்கையின் படி இம்முறை வியாபார நிலையங்களுக்கு வரி அறவிடப்படாது விட்டாலும், ஆவணி திருவிழாவிற்கு அமைக்கப்படும் கடைகளுக்கு வரி அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை ஆடி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2 ஆம் திகதி திருவிழா நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-285)

# மண்ணெண்ணெய் அடுப்பிற்கு மாறியும் பயனில்லை

## வவு.மக்கள் ஆதங்கம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் சீரான முறையில் மண்ணெண்ணெய் கிடைக்கப்பெறாமையினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலமை உருவாகியுள்ளது.

வவுனியாவிலுள்ள எரிபொருள் மீள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணைக்காக கடந்த ஒரு வாரகாலமாக விவசாயிகள், மீனவர்கள், பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் பல மணிநேரம் காத்திருந்தும் மண்ணெண்ணெய் கிடைக்கப்பெறாது ஏமாற்றத்துடனே வீடுதிரும்பியிருந்தனர். தோட்டம் மற்றும் விவசாய நடவடிக்கைகளின் போது நீர் பாய்ச்சும் மோட்டரை இயக்குவதற்கும், குளத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் தங்களின் படகு மற்றும் வள்ளத்திற்கு எரிபொருள் இன்மையுடன் வீட்டில் சமையல் நடவடிக்கைக்கு அடுப்பிற்கு மண்ணெண்ணெய் இன்மை என இவ்வாறு பலர் பாதிப்படைந்துள்ளனர்.

எரிவாயுவிற்கு தட்டுப்பாடு நிலவியமையடுத்து மண்ணெண்ணெய் அடுப்பிற்கு மாறிய பல குடும்பப் பெண்கள் மண்ணெண்ணையும் இன்றி சமையலை மேற்கொள்ளாத நிலமை உருவாகியுள்ளது. கிராமப்புற பகுதிகளில் மக்கள் விறகுக்கு மாறியுள்ள போதிலும் நகரப்புற மக்கள் அதற்கு தங்களை மாற்றியமைக்க முடியாத நில்மை காணப்படுகின்றது.

எனவே எமது மாவட்ட அதிகாரிகள் உரிய தரப்பினரிடம் கலந்துரையாடி மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயுவினை பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-280)



மருத்துவர் லவனின் நினைவாக சர்வமத ஆன்மீக அறக்கட்டளையின் ஏற்பாட்டில் வவுனியாவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு தென்னை மரகன்றுகளும், தானிய விதைகள் மற்றும் கோழிக்கூடுகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டலஸ் தலைமை...

கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த தேர்தலை எதிர்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்படும் இந்தக் கூட்டணியில் இணைவதற்கு முக்கிய பல பிரமுகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

புதிய கூட்டணியின் சின்னம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை, அதன் நிறம் மஞ்சள் நிறமாக இருக்க வாய்ப்புள்ளது என்று புதிய கூட்டணியைக் கட்டியெழுப்புவதில் உறுதியாக உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் எம்.பி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் கட்டமைப்பில் உருவான மிகப்பெரிய கூட்டணியாக இது அமையும் எனவும் அந்த உறுப்பினர் குறிப்பிட்டார்.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான எம்.பிக்கள் குழுவொன்று தேர்தல் ஆணைக்குழுவுடன் நேற்று முன்தினம் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. (ம)

## சீனிக்கும் கட்டுப்...

மானி அறிவித்தல் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (ம)

**தன நிதானய**
திகதி - 2022.06.11
சீட்டிழுப்பு இலக்கம் - 813
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 29 35 40 76
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

**மஹஜன சம்பத**
திகதி 2022/06/11
சீட்டிழுப்பு இலக்கம் 4783
ஆங்கில எழுத்து: Z
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 9 6 4 4 8
தேசிய லொத்தர் சபை

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.11
சீட்டிழுப்பு இலக்கம் 092
வெற்றி இலக்கங்கள்: மேஷம் 12 43 45 51 மேஷம்
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 11/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1131
வெற்றி எழுத்து: Y
சுப்பர் இலக்க: 19
வெற்றி இலக்கங்கள்: 15 35 58 66

**கொவிசெத**
திகதி 2022.06.11
சீட்டிழுப்பு இலக்கம் 3025
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 29 55 59 76
தேசிய லொத்தர் சபை

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 11/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1261
வெற்றி இலக்கங்கள்: கன்னி 5 9 7 7 5 0
தேசிய லொத்தர் சபை

## மக்களின் மனங்...

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகினால் தான் மக்களின் மனதை வென்று பிரதமர் ரணிலால் பணியாற்ற முடியும் என்றும் சஜித் சுட்டிக்காட்டினார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு கோரி மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தொடர்கின்றது.

ஆனால், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய புள்ளியாக விளங்கும் கோட்டாபய வெட்கம் இல்லாமல் இன்னமும் ஜனாதிபதிக்கான கதிரையில் அமர்ந்திருக்கின்றார். தோல்வியடைந்த ஜனாதிபதியாக தான் செல்ல மாட்டார் என்று அவர் சவால் விடுகின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டின் நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடன் வீட்டுக்கு அனுப்பும்நடவடிக்கையில் ரணில் முதலில் இறங்க வேண்டும்.

ஏனெனில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருக்கும் வரைக்கும் நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதுவுமே செய்ய முடியாது என்றார். (ம)

## விலை அதிகரிப்பு...

பாணம் மற்றும் திருநெல்வேலி பிரதேசத்தில் 30இற்கும் மேற்பட்ட வியாபார நிறுவனங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் அரிசியை கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்த ஐந்து விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், நூடில்ஸ் மற்றும் பிஸ்கட் வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்தமைக்காக இரண்டு விற்பனை நிலையங்களும் மொத்தமாக ஏழு வியாபார நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் பரிசோதனை, கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுமென யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-33)

## கட்டுப்பாட்டு...

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சந்தையில் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன. ஒரு கிலோ அரிசியின் விலை 250 ரூபாயை நெருங்கும் நிலையில் ஒரு கிலோ சீனியின் விலை 300 ரூபாயைத் தாண்டியுள்ளது. ஒரு கிலோ பருப்பு விலை 600 ரூபாயை தாண்டியுள்ளது.

பால்மா சந்தையில் விற்கப்படுவதில்லை. ஒரு கிலோ காய்ந்த மிளகாய் விலை ரூ.1,600 ஆக உள்ளது. பல கடைகளில் பொருட்கள் தட்டுப்பாடு

# மன்னாரில் எரிவாயு முகவருடன் பொதுமக்கள் வாய்த்தர்க்கம்

(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் பகுதியில் உள்ள எரிவாயு விற்பனை நிலையத்திற்கு முன்பாக பதற்றமான சூழல் உருவாகியுள்ளதுடன் முகவர் மற்றும் பொது மக்கள் மத்தியில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் சனிக்கிழமை மதியமளவில் குறித்த எரிவாயு விற்பனை நிலைய முகவர் அப்பகுதியில் அடுக்கி வைத்திருந்த எரிவாயு சிலிண்டர்களை தூக்கி எறிந்ததுடன் வரிசையில் வைக்கப்பட்ட சிலிண்டர் உரிமையாளர்களுக்கு எரிவாயு வழங்க முடியாது என வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் நீண்ட நாட்களாக எரிவாயு சிலிண்டர்களை அடுக்கி வைத்து காவல் காத்துக் கொண்டிருந்த பொதுமக்கள் எரிவாயு விற்பனை நிலைய முகவருக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-285)

ஏற்பட்டுள்ளது.

சில சதொச விற்பனை நிலையங்களின் அலுமாரிகளில் கூட மளிகைப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையைக் காணலாம். (ம)

## இராணுவ...

அப்பகுதியில் அமைந்துள்ள பொது மக்களின் வீடுகளில் இருக்கும் ஓடுகள், தளபாடங்கள், யன்னல்கள் என்பவற்றையும் எடுத்துச் செல்வதாக பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ம)

## கருத்தை...

தெரிவித்த கருத்தினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

தனது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை இட்டு அவர் இது குறித்து தனது மறுப்பினை பதிவு செய்துள்ளார்.

எரிசக்தி முதலீட்டுத் திட்டங்களை அதானி குழுமத்திற்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியதாக, ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்தார் என்று இலங்கை மின்சார சபைத் தலைவர் இலங்கையின் பாராளுமன்ற கோப் குழுவிடம் தெரிவித்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் பொது நிறுவனங்கள் மீதான விசாரணை (கோப்)குழுவில் முன்னிலையான, மின்சார சபையின் தலைவர், 500 மெகாவாட் காற்றாலை மின்நிலையத்தை இந்தியாவின் அதானி குழுமத்திற்கு வழங்குமாறு இந்தியப் பிரதமர் தம்மை வலியுறுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிட்டதாக மின்சார சபைத் தலைவர் தெரிவித்தமை குறிப்

## அரிசியை...

வேண்டாம் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

வர்த்தக அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது அமைச்சர் இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

பல வகையான அரிசிகளுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்ததன் பின்னர், நெல் ஆலை உரிமையாளர்கள் அரிசி விநியோகத்தை மட்டுப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என்று அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இது வழக்கமாக கட்டுப்பாட்டு விலையை விதித்ததன் பின்னர் அரிசி உற்பத்தியாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையாகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம)

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1758
சீட்டிழுப்பு திகதி 2022.06.11
நிறம் நீலம்
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: L 07 58 64 72
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,263,600/-

**சனிதா**
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.11
சீட்டிழுப்பு இல : 3919
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,120,240/-
வெற்றி இலக்கங்கள்: 14 25 27 60
ஆங்கில எழுத்து: A
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி**
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,627,270.40
திகதி 2022-06-11
வெற்றி வாரம் 3470
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்: 02 36 38 48
விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,369,180/-

**அத கோடிபதி** ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1584
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.06.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,400,240/-
வெற்றி இலக்கங்கள்: 32 46 61 64
ஆங்கில எழுத்து: L

**12 லக்ன**
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 27 03 26 45 66
சுப்பர் இலக்கம்: 27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 241,765,669/-
சீட்டிழுப்பு வாரம் 934
வர்ணம் சிவப்பு
திகதி 2022.06.11 சனிக்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-4410)

எமது கிளைகள்

- பயிற்சிக்கால கொடுப்பனவு - 20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777


# மத்தள விமான நிலையத்தால் மாதாந்தம் ரூ. 100 மில்லியன் நட்டம்

மத்தள விமான நிலையத்தின் ஊடாக மாதாந்த நட்டம் 100 மில்லியன் ரூபாய் என நேற்று தெரியவந்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் பொறுப்பதிகாரிகள் நேற்று மத்தள விமான நிலையத்திற்கு விஜயம் செய்து தற்போதைய நிலைமையை பார்வையிட்டனர்.

இந்நிலையில் மத்தள விமான நிலையம் தனியார் மயமாக்கப்படாமல் தொடர்ந்தும் புனரமைக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது, விமான நிலையத்தில் ஏற்படும் செலவுகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் அறிவுறுத்தினார். (ம)


## காணி 6 வருட குத்தகைக்கு

இல. 461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் (ஆரியகுளச் சந்திக்கு அருகில், புகையிரத நிலையத்திற்கு நேர் எதிராக, ஆயுர்வேத கல்லூரி முன்பு இயங்கிய) 9 பரப்பு 10.7 குழி விஸ்தீரணமுடைய காணியும் கட்டடமும் 6 வருட குத்தகைக்கு வழங்கப்படும்.

(11852)

075 041 2552

## UK STUDENT VISA

IELTS தேவையில்லை (நிபந்தனைக்குட்பட்டது)

DEGREE முடித்தவர்களுக்கு 1 வருட MASTER DEGREE மற்றும் வேலைவாய்ப்புக்கள்



(C-4410)

CIMS COLLEGE 0777-068-777

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

(11715)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன், கூலியாள், பெயின்ரர் மற்றும் ஜிப்சம் வேலை செய்ய கூடியவர்கள் தேவை.

மேசன்-2,000/=, லேபர்-1,600/=

(11842)

076 760 0403
077 592 5371

## காணி விற்பனைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் 1 1/2 பரப்பு, 5 1/2 பரப்பு மற்றும் பருத்தித்துறை வீதியில் (ஆரியகுளத்திற்கு அருகில்) 4 1/4 பரப்பு வெற்றுக் காணிகள் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். தரகர் தேவையில்லை.

(C-4478)

077 707 8292
077 892 8094

## A/L PHYSICS CLASS

Ranjit Sir இன் உயர்தர பௌதிகவியல் வகுப்பு

24 Batch இற்கு

- Y.M.C.A கல்வி நிலையம் – தம்பசிட்டி
- Modern Education Centre - Point Pedro - Nelliady

ஆரம்பமாகின்றது. மேலும் 23,22 Batch இற்கான Paper Class இற்கும்.

(11841)

தொடர்பு 077 600 4896

## Job Available

நாட்டில் நிலவிவரும் பொருளாதார சிக்கல்களை கருத்தில் கொண்டு எமது H.R நிறுவனம் மேலும் பல கிளைகளுக்காக புதிய நபர்களை தெரிவு செய்ய உள்ளது. வட மாகாணம் முழுவதிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு தகைமைகளுக்கேற்ற வகையிலும் பதவிகள் உள்ளன. தற்போது 50 பேருக்கான வாய்ப்பு உண்டு. பயிற்சிகள் வழங்கப்பட்டு பின்னர் நிரந்தரமாக்கப்படுவர். நேர் முகத்தேர்வில் நபர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(11838)

077 174 3524, 077 570 7584

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள/ பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் (பில் கிளார்க்) சிட்டை போடுபவரும் உடன் தேவை.

(11851)

021 222 9286

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் அமைந்துள்ள வீடு அரச உத்தியோகத்தர்கள், படிக்கும் மாணவர்கள் விரும்பத்தக்கது. (விடுதியாகவும் இணைத்து பயன்படுத்தலாம்) சகல வசதிகளுடனும் மாபிள் பதிக்கப்பட்டது.

(11837)

077 348 0039
077 258 8938

## கடை வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதி வேம்படிச் சந்திக்கு அண்மையாக (50 m தூரத்தில்) கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

(11839)

074 211 5526

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- கட்டடங்களில் ஏற்படும் வெடிப்புக்களை உத்தரவாதத்துடன் சீர்செய்து கொள்ள இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பொருட்கள் மற்றும் கட்டடக் கம்பிகளில் ஏற்பட்ட துருப்பிடித்தலை அகற்றும் இரசாயனப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உலகத்தரம்மிக்கது

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள்

(11814)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 10 பரப்பு காணி விற்பனைக்கு

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(11848)

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை - மூன்று இலட்சம்

தொடர்பு:- 076 658 3621, 076 436 5814

## ராஜ் சொத்து விற்பனை நிலையம்

வைமன் றோட் சந்தி (பாரதி சிலை முன்பாக)
நல்லூர், யாழ்ப்பாணம்.

### வீடுகள் வாடகைக்கு உண்டு

பலாலி வீதியில், கோவில் வீதியில், நாவலர் வீதியில், ஆஸ்பத்திரி வீதியில், பிறவுண் வீதியில் வீடுகள் வாடகைக்கு உண்டு.

தொ. பே. இல. : 077 603 3259

### வீடுகள் வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர சபை 5 Km இற்குள் வீடுகள் வாடகைக்குத் தேவை. இருப்பவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(C-4479)

தொ. பே. இல. : 077 603 3259

### காணிகள் விற்பனைக்கு உண்டு

- திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில்
  - 1 பரப்பு 11 குழி - 14 மில்லியன்
  - 1 பரப்பு 16 குழி - 14 மில்லியன்
- நாவற்குழி ● 40 பரப்புக் காணி - பரப்பு 32 இலட்சம்

தொ. பே. இல. : 077 603 3259

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் - 1 மணி முதல் 6 மணிவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.